## வட மாகாண சபை - 2014

வட மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந் அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை

உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, வட மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

(i) மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் கணக்குகள் 2015 மார்ச் 24 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) ஏனைய நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

(அ) 2015 மார்ச் 31 இல் உள்ளவாறான மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தலின் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| | **கணக்கின் வகுதி** | **கணக்குகளின் மொத்த எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்பட்ட கணக்ககளின் மொத்த எண்ணிக்கை** | **2015 மார்ச் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத கணக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 36 | 36 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | 01- | - |
| (iii) | மாகாண அரசாங்க உத்தியோகத்தர் களிற்கான முற்பணக் கணக்குகள் | 36 | 33 | 03 |
| (iv) | வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் | 04 | 03 | 01 |
| (v) | நிதியக் கணக்கு | 01 | 01 | - |
| | | 78 | 74 | 04 |

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான வட மாகாணத்தின் திரண்ட வருமானக் கணக்கு நிலுவைகள் மா.நி வி 145 இன் பிரகாரம் 2015 செப்தெம்பர் 31 வரையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒவ்வொரு வருமான தலைப்பிற்கான வருமான கணக்குகள் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கருத்துரைகள்

முழுமையாக அல்லது பகுதியளவில் நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தாமை, ஆண்டு மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடின்றி செலவினம் செய்யப்பட்டமை, கணக்குகளில் நிலுவையான பொறுப்புக்கள் விடுபட்டிருத்தல் மீண்டுவரும் செலவினங்கள் எதிர்மாறாக மூலதனச் செலவிற்கு சாட்டுதல் தாக்கல் செய்யப்பட்டமை, மூலதனச் செலவினங்களிற்கான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமை, சேமிப்புக்களிற்குப் போதிய மற்றும் திருப்திகரமான விளக்கங்களின்மை மற்றும் மாகாணத் திறைசேரிப் பதிவேடுகளுடன் திணைக்களப் பதிவேடுகளை இணக்கம் செய்யாமை முதலிய மீண்டும் மீண்டும் விடப்படும் பொதுவான குறைபாடுகள் மீளாய்வாண்டிற்காக சில மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டிற்கான பல்வேறு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

(i) பல செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகள் எழுந்தமான அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தமையால் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட மாகாண திறைசேரி அறிவுறுத்தல்களுடன் இணங்காமை

(iii) தொலைபேசி சிட்டை, தபால் கட்டணங்கள், எரிபொருள், மின்சாரம் முதலியன தொடர்பான ரூபா 83,361,186 தொகையான பொறுப்புக்களிற்கான சார்பற்ற உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) மூன்று திணைக்களத்தின் 13 விடயங்கள் தொடர்பில் பத்து ஆண்டுகளிற்கு மோலாக காட்டப்பட்ட ரூபா 15,589,699 கூட்டு மொத்தத் தொகையான நட்டங்கள் மீது நடவடிக்கை எடுக்கபப்பட்டிருக்கவில்லை.

(v) புதிய செலவின குறியீடுகளை உருவாக்காமல் 28 செலவினத் தலைப்புக்களின் கீழ் ரூபா 461,847,051 தொகையான செலவினம் ஏற்பட்டிருந்தது.

(vi) பல்வேறு மாகாண திணைக்களங்களின் மூலதன முன்னேற்றம் தொடர்பாக 135 விடயங்களின் மேற்கொள்ளப்பட்ட ரூபா 11,817,968 தொகையான மூலதனச் செலவினம் தவறாக மீண்டுவரும் செலவினத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(vii) கணிப்பீட்டுச் சபை அறிக்கையின்படி, மீளாய்வாண்டின் போது பெரும் எண்ணிக்கையான சொத்துக்கள் காணாமல் போயுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும், திணைக்களங்கள் இந்த நட்டங்களை அவர்களுடைய ஒதுக்கீட்டுக் கணக்ககுகளில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் மாகாண நிதி விதி இல. 69 இன் பிரகாரம் நட்டங்கள் மீதான ஆரம்ப அறிக்கைகள் மற்றும் இறுதி அறிக்கைகள் அந்த திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) கணிப்பீட்டுச் சபை அறிக்கையின்படி, 16 விடயங்கள் இழக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 01 அமைச்சு மற்றும் 03 திணைக்களங்களால் ஒதுக்கீட்டுக கணக்குகளில் அந்த நட்டங்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சுகாதார திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட இணக்கக் கூற்றுகள் ரூபா 3,792,174 தொகையான இனங்காணப்படாத மீதிகளை உள்ளடக்கியிருந்தது.

(ii) கல்வி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்கள் ரூபா 1,371,875 தொகையான சீராக்கப்பட்ட மீதிகளை உள்ளடக்கியது.

(iii) யாழ்ப்பாணம் சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்கள் ரூபா 3,792,174 தொகையான கிளிநொச்சி மற்றும் முல்லைதீவின் நிலுலையாகவிருக்கின்ற மீதியை உள்ளடக்கியிருந்தது.

(iv) 04 அமைச்சுக்கள் மற்றும் 19 அமைச்சுகளிடமிருந்து பெறவேண்டிய தீர்க்கப்படாத கடன் மீதிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 28,000,309 ஆன கடன் மீதி கடன் மீதிகளிற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாமையால் உள்ளபடியான தேறக்கூடிய தொகை வெளிப்படுத்தலை கணக்காய்வில் மதிப்படுவதற்கு சாத்தியமற்றிருந்தது.

**2.2.4 வர்த்தக முற்பண கணக்குகள்**
**---------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ரூபா 212,349,022 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் மீளாய்வாண்டின் போது எந்திரவியல் பிரிவால் நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பற்றுச்சீட்டுக் கட்டளைகள் போன்ற எவ்வித ஆதாரமான ஆவணங்களும் இல்லாமல் எந்திரவியல் பிரிவால் ரூபா 212,349,022 பெறுமதியான பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 175,244,729 தொகையான நிலையான சொத்துக்கள் இரண்டு பண்ணைகளால் பங்களிப்பு செய்யப்பட்ட மூலதனத்திற்கு சமமான தொகையால் பிரதிநிதித்துவப்பட்டிருக்கவில்லை.

(iv) மாட்டு தீன் மற்றும் கோழித்தீன் சந்தை விலைக்கு மேலான உயர்ந்த விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவால், ரூபா 80,510 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(v) மாகாண சபைகளில் செயற்படுத்தப்பட்ட நான்கு முற்பணக் கணக்கு செயற்பாடுகளில், மூன்று முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் மீதி நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(vi) உணவு மற்றும் விவசாய தாபனத்தால் (எவ்ஏஓ) நன்கொடையளிக்கப்பட்ட 03 வாகனங்கள் பெறுமதியிடப்பட்டு வவுனியா அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையால் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(vii) ரூபா 104,102 தொகையான மதிப்பீட்டு வரிகளின் நிலுவைகள் வவுனியா அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையால் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(viii) பப்பாசி மரங்கள் மற்றும் தேசிக்காய் மரங்கள் மற்றும் ஏனைய மரங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் பெறுமதியிடப்பட்டு வவுனியா அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையால் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ix) புடவை, கயிறு மற்றும் மட்பாண்டம் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம் பெறுமதியிடப்பட்டு கைத்தொழில் திணைக்களத்தால் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கட்டுநிதி கணக்குகள்

(i) உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தால் ரூபா 5,855,800 கூட்டு மொத்தத் தொகையான கட்டுநிதி மீதி 2015 ஆகஸ்ட் 31 வரை தீர்க்கப்படாது இருந்தன. இது தொடர்பில், உரிய நிறுவனமிடமிருந்து நிலுவையிலுள்ள கட்டுநிதியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒதுக்கீட்டு கணக்கின் குறிப்பு (iii) கட்டுநிதி மீதிகள் தீர்க்கப்படாமைக்கான காரணங்கள் தரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் காலாவதியான வைப்புக்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செலுத்தப்படாத சம்பளங்கள், விதவைகள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதிய பங்களிப்பு, வசூலிக்கப்படாத காசோலைகள், காப்புறுதிக் கோரிக்கைகள், வங்கி திருப்பல்கள், கடன் அறவீடுகள், தண்டப்பண கட்டணங்கள் மற்றும் செலுத்தப்படாத வீட்டு வாடகைகளுக்காக மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 685,562 தொகை நடவடிக்கை எடுக்கப்படாமல் இரண்டு அமைச்சுக்கள் மற்றும் ஐந்து திணைக்களங்களின் வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 1,979,364 தொகையானமைக்கும் போதே செலுத்தும் வரி, முத்திரை தீர்வை மற்றும் பெறுமதி சேரி வரி என்பன உரிய நிறுவனங்களிற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்குகளில் விடப்பட்டிருந்தது.

(iv) இரண்டு அமைச்சுக்கள் மற்றும் பதின்நான்கு திணைக்களங்களால் பல்வேறு நோக்கங்களிற்காக பெறப்பட்ட ரூபா 133,725,218 கூட்டு மொத்தத் தொகையான நிதிகள் குறித் நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(v) ரூபா 14,527,719 கூட்டு மொத்தத் தொகையான ஆங்கில டிப்ளோமாவிற்காக இரண்டு அமைச்சுக்கள் மற்றும் ஆறு திணைக்களங்கள் என்பவற்றின் பிடிகாசு, தனிப்பட்ட வைப்புக்கள் மற்றும் செயற்திட்ட நிதிகள் என்பன நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் 2 ஆண்டுகளிற்கு மேலாக வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(vi) 3 ஆண்டுகளிற்கு மேலாக ஆளுநர் செயலகத்தின் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த ரூபா 7.5 மில்லியன் தொகை வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாகாண சபைக்கு அவருடைய ஆதனத்தை விற்பதற்கு காணி உடமையாளர் விருப்பமற்றிருந்ததால் 2013 பெப்ரவரி 22 இல் பிரதம செயலாளரின் வைப்புக்கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(vii) ரூபா 715,450 தொகையான மூன்று திணைக்களங்களின் நுட்பமான வைப்புக்கள் நடவடிக்கை எடுக்காமல் 6 மாதங்களிற்கு மேலதிகமாக வைப்புக்கணக்குகளில் பேணப்பட்டிருந்தது.

(viii) முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலத்தின் திணைக்களப் புத்தகங்கள் மற்றும் திறைசேரிப் புத்தகங்கள் என்பவற்றின் இறுதி வைப்புக்கள் மீதிகளிற்கு இடையில் காட்டப்பட்ட ரூபா 503,782 வித்தியாசம் விவரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) மாகாண நிதி விதி 162 இன் பிரகாரம், திறைசேரி அனுமதி பெற்றுக்கொள்ளாமல் பொது வைப்புக் கணக்குகளிற்கு ஒரு அமைச்சு மற்றும் ஐந்து திணைக்களங்களால் ரூபா 348,854,926 மொத்மான தொகைகள் மாற்றப்பட்டிருந்தது.

### 2.2.7 கணக்கீட்டுக் குறைபாடுகள்

05 அமைச்சுக்கள் மற்றும் 28 திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 5,108.58 மில்லியன் கூட்டு மொத்த தொகையான சொத்துக்கள் மாகாணசபையின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(i) பெறவேண்டிய கணக்குகள்

(அ) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து இடமாற்றம் சென்ற உத்தியோகத்தர்கள், ஓய்வுபெற்றோர், இறந்தோர், செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டவர்கள், சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு சென்றோர் பதவி வறிதாக்கப்பட்டோர் மற்றும் இடைநிறுத்தப்பட்டோர் என்போரிமிருந்து பெறவேண்டிய ரூபா 33,195,148 கூட்டு மொத்த தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து மாவட்டங்களிலுள்ள 34 உள்ளுராட்சி அதிகாரசபைகளின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 51,939,866 கூட்டுமொத்தத் தொகை பெறவேண்டிய கணக்குகளாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது அறவிடப்படாது இருந்த ரூபா 5,312,585 கூட்டு மொத்த தொகையான கடன்பட்டோர் தொடர்பில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் செயற்படுத்தப்பட்ட எந்திரவியல் பிரிவால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) கடன் மீதிகளிற்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்காமையில் வெளிப்படுத்துகின்ற 08 திணைக்களங்களிற்கு தீர்க்க வேண்டியிருந்த அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள் தொடர்பில் நிதிக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 5,715,270 ஆன செலவு மீதியின் வெளிப்படுத்தல்களை மதிப்பிடுவது சாத்தியமற்றிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து மாவட்டங்களின் 34 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் 34 நிதிக்கூற்றுக்களில் சில்லறைக் கடன்கொடுத்தோராக ரூபா 334,934,251 கூட்டு மொத்தத் தொகைகள் காட்டப்பட்டிருந்தது.

**2.2.9 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

(i) 05 அமைச்சுக்கள் மற்றும் 28 திணைக்களங்கள் தொடர்பான கணக்குகளிலுள்ள ரூபா 674,435,063 கூட்டு மொத்தத் தொகை கொண்ட 2,162 விடயங்களை பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள், எந்திரவியல் பொறியியலாளர் சான்றிதழ், பொருட்கள் பெற்றுக் கொண்ட குறிப்புக்கள், பங்குபற்றியோர் பட்டியல், பெறப்பட்டோர் கையொப்பம், காசு பற்றுச்சீட்டு, மூல பற்றுச்சீட்டு, விலைப்பட்டியல், பொருளிருப்பு சான்றிதழ், வேலை பூர்த்தியாக்கற் சான்றிதழ்கள் போன்ற வேண்டப்பட்ட சான்றுகளின்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

(ii) 04 நிறுவனங்ள் தொடர்பில் ரூபா 18,447,359 கூட்டு மொத்த தொகையான முற்பண கணக்கு நடவடிக்கைகளின் கணக்குகளில் 59 விடயங்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்குத் தகவல்களைச் சமர்ப்பித்தல்

(அ) முன்னைய ஆண்டுகளின் போது சிறுவர் உரிமையின் கீழ் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ஐந்து மாவட்டங்களில் வலயக் கல்விப் பணிப்பாளரால் மற்றும் மாகாண திறைசேரியால் பாதுகாப்பு படை தலைமை செயலகத்திற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 27.5 மில்லியன் தொகையான நிதி பயன்படுத்தியதற்கான ஆவணச் சான்று கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், சிறுவர் உரிமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதிகள் பயன்படுத்தியதற்கான ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) வடக்கில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதர மீட்டெடுப்புக்காக யுத்தத்திற்கு பிந்திய அவசர உதவி செயற்திட்டத்திற்கு 2014 சனவரியில் ரூபா 25,470,0000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆறு இணைந்த பயிற்செய்கை தொடர்பான நலனாளிகளின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) ரூபா 149.68 மில்லியன் கிரயத்தில் நடாத்தப்பட்ட பல்வேறு செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் தொடர்பில் மாகாண கல்வித் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சட்ட ஆலோசனையாளரின் நியமனம் தொடர்பில் நியமன அடிப்படை, கடமைப் பட்டியல், மாதாந்த கொடுப்பனவு, செய்யப்பட்ட ஆலோசனை வேலை, வருகை மற்றும் ஆட்சேர்பபுத் திகதி போன்ற விபரங்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(உ) ஐந்து மாவட்டங்களிலுள்ள 34 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பில் கணக்காய்விற்காக வேண்டப்பட்ட தகவல்கள் கிடைக்காமை காரணமாக ரூபா 1,289,880,842 பொறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மாகாண சபைக்குச் சொந்தமான பல்வேறு வாகனங்கள் விபத்துக்குள்ளான போதிலும் அத்தகைய விபத்துக்கள் விபரங்களின் மற்றும் ஏனைய விபரங்களை கணக்காய்விற்கு கோரப்பட்ட போதிலும் கிடைத்திருக்கவில்லை.

(எ) ஆளுநர் செயலத்திற்கு இணைக்கப்பட்ட வாகனங்களின் விபரங்கள் மற்றும் எரிபொருள் மற்றும் வாகனப் பராமரிப்புகளில் ஏற்பட்ட செலவினம் என்பவற்றின் விபரங்கள் கணக்காய் பரிசோதனைகளிற்காக கோரப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது பொதுச் சேவை ஆணைக்குழுவால் நியமனங்கள், உள்ளீர்தல்கள், உறுதிப்படுத்தல்கள், இடமாற்றங்கள் மற்றும் பல்வேறு ஒப்பந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் குழுக்கூட்டக் குறிப்புக்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிற்குச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியின் விபரங்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் போது விவசாய அமைச்சால் வழங்கப்பட்ட ரூபா 3.76 மில்லியன் தொகையான சரங்கள், துவாய்கள், அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்ட நலனாளிகளின் விபரங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட பன்னிரண்டு கணக்காய்வு ஐய வினாக்களிற்கான பதில்கள் 2015 ஆகஸ்ட் 31 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அந்தக் கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடத்தக்க பெறுமதி ரூபா 153,645,331 தொகையாகும். விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **அமைச்சு/திணைக்களம்** | **கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை** | **தொகை ரூபா** |
|---|---|---|
| மாகாண கல்வி அமைச்சு | 03 | 63,878,435 |
| மாகாண விவசாய அமைச்சு | 01 | 291,420 |
| மாகாண கல்வித் திணைக்களம் | 04 | 49,391,003 |
| மாகாண விளையாட்டுத் திணைக்களம் | 02 | 21,731,764 |
| மாகாண விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களம் | 02 | 18,352,709 |
| | **12** | **153,645,331** |

## 2.2.10 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

(i) கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | தொகை | இணங்காமை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை அரசாங்கத்தின் தாபனவிதிக் கோவை | ரூபா | |
| (i) அத்தியாயம் XIV இன் 1.3 ஆம் பிரிவு | 103,186 | மாகாண நிதியிலிருந்து ஆளுநர் செயலகத்தால் ஹொட்டல் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில், அவை அலுவலக அல்லது தனிப்பட்ட வருகைகளா என மெய்மையாய்வு செய்வதற்கு ஆளுநர் செயலகத்திடமிருந்து ஆவணச்சான்றுகள் சான்றுகள் பெற முடியாதிருந்தது. |
| (ii) அத்தியாயம் XLVII இன் 2.1 ஆம் பிரிவு | 9,000 | ஆளுநர் செயலகம் மீளாய்வாண்டின் போது றெட் வைனை கொள்வனவு செய்திருந்தது. |
| (ஆ) வட மாகாணத்தின் நிதி விதிகள் | | |
| (i) மா.நி.விதி. இல 106 | 12,360,470 | உரிய அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் இரண்டு அமைச்சுக்கள் மற்றும் ஏழு திணைக்களங்களால் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. |
| (ii) மா.நி.விதி இல. 107 | 1,261,351 | ரூபா 1,261,351 ஆன கொடுப்பனவுகள் நான்கு திணைக்களங்களின் சான்றுபடுத்தும் உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) மா.நி..வி இல. 166 | 335,416 | கடந்த ஆண்டில் ஏற்பட்ட ரூபா 335,416 ஆன செலவினம் மாகாணசபை செயலகம் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் எந்திரவியல் பிரிவால் உரிய அதிகாரம் பெறப்படாமல் செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iv) மா.நி.வி. இல. 187.2.(2) | 75,000 | கிளிநொச்சி வலய கல்வி அலுவலகத்தால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) மா.நி.வி.இல 415(1) | - | அதிகமான திணைக்களங்கள் தொலைபேசி பதிவேடு மற்றும் தொலைபேசி அழைப்புக்கள் பதிவேடு என்பவற்றினை பேணியிருக்கவில்லை. |
| (vi) மா.நி.வி 420(1)(v)(xiii) | 8,467,600 | இரண்டு அமைச்சுக்கள் மற்றும் ஐந்து திணைக்களங்களால் அலுவலக கட்டிடங்களிற்காக மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து மதிப்பாய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளாமல் மாதாந்த வாடகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (vii) மா.நி.வி 420(1)(X) | 510,000 | மாகாண விவசாய அமைச்சால் குறிப்பிடப்பட்ட எல்லைகளை விஞ்சி அலுவலக கட்டிடத்திற்கான முற்பண கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

---

| | | |
|---|---|---|
| (i) நி.பி. 110 | - | பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் நட்டங்கள் மற்றும் சேதங்களிற்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |
| (ii) நி.பி. 137 | 121,370 | வடக்கு கிழக்கு உள்ளூராட்சி ஆசேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்தின் (நெல்சிப்) 03 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி. 138 | 119,893,181 | வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்தின் (நெல்சிப்) 07 |

| | | |
|---|---|---|
| | | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுபடுத்தும் உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி. 214 | - | பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பொறுப்புக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி. 510 | 1,286,038 | மீளாய்வாண்டிற்கான கால் நடை பண்ணைகள் மற்றும் எநதிரவியல் பிரிவின் தேறிய இலாபம் மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) நி.பி. 1646 மற்றும் 1647 | - | பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்கம் | - | (i) வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை பரீட்சிக்கப் பட்டிருக்காததுடன் வாகன சம்பவக் குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. |
| | | (ii)திருத்தங்களிற்காக கொடுப்பனவுகள் செய்யவதற்கு முன்னர் எந்திர பொறியியலாளரிடம் இருந்து சான்றுபடுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்கம் | 288,072 | (i) சுற்றறிக்கைக்கு முரணாக விவசாய அமைச்சால் எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டிருந்தது |
| | 331,704 | (ii) கல்வி அமைச்சு செயலாளர் அவருக்காக ஒதுக்கப்பட்ட வானங்களிற்கு செலுத்தப்பட்ட எரிபொருள் படிகளிற்கு மேலதிகமாக குழு வாகனங்களை பயன்படுத்தியிருந்தார். |
| (iii) 2008 திசெம்பர் 31 ஆந்திகதிய 30/2008 ஆம் இலக்கம் | 1,531,890 | கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வவுனியா பொது வைத்தியசாலை ரூபா 250,000 ஆன ஆகக்கூடிய கடன் தொகைக்கு முரணாக இடர் கடன்களை வழங்கியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திறைசேரி சுற்றறிக்கை | | |
| | (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கம் மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கம் | - | (i) பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | | 61,517,413 | (ii) வட மாகாணத்தின் போசாக்கு முன்னேற்றத்திற்கு உள்ளூர் மட்ட போக்கு தலையீட்டு செயற்திட்டத்தால் (ஜேஎஸ்டிபிஎவ) கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பௌதீக உள்ள தன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு புறம்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்கம் | | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 04 அமைச்சுக்கள் மற்றும் 25 திணைக்களங்களால் உரிய திகதியில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | அரச நிதிச் சுற்றறிக்கை | | |
| | 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்கம் | 93,172 | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது மூன்று அமைச்சுக்கள் மற்றும் ஏழு திணைக்களாங்களால் தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2008 சனவரி 01 ஆந் திகதிய 2006 இன் 12 ஆம் இலக்க 12 ஆம் முத்திரை வரி (திருத்திய) அதிகாரச் சட்டம் | 14,050 | 03 அமைச்சுக்கள் மற்றும் 12 திணைக்களாங்களால் முத்திரை வரி அறவிடப்படாமல் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. |
| (ஏ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் | - | இரண்டு பண்ணைகள் மற்றும் ஒரு கைத்தொழில் துறையால் குறிப்பிடப்பட்ட ஊழியர்களிற்கு ரூபா 5,475,861 தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புகள் செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ii) வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை

(அ) 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிகளின் விபரங்கள் கணக்காய்விற்காக கோரப்பட்ட போதும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண திறைசேரி பெறுமதி சேர் வரிக்காக வருடாந்த மதிப்பீடுகளில் புறம்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மாகாண திறைசேரியால் வெளித்தரப்பினருக்கு மாகாண சபையின் பல்வேறு நிறுவனங்ககளால் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியை கணிப்பிட முடியவில்லை. இதன்விளைவாக வருடாந்த மதிப்பீடுகளில் ஏற்பாடு இல்லாமல் பெறுமதி சேர் வரியாக மூலதன ஒதுக்கீட்டிலிருந்து மாகாண சபையால் கருத்திற்கொள்ள வேண்டிய தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ஆளுநரின் தனிப்பட்ட செயலாளரிற்கு மாதாந்த சம்பளம் ரூபா 106,200 செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஏழு மாதங்களிற்காக அவருடைய சம்பளத்தில் உழைக்கும் போது செலுத்தும் வரி சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மத்திய அரசாங்கத்தின் கொள்கைகளிற்கு முரணாக தாபன விடயங்களை அமுலாக்குதல்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட 1999 யூன் 01 ஆம் திகதிய பிடி/பீபி/9 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்களின் தாபன விடயங்களின் அமுலாக்கல் அரசாங்க சேவையின் நேரொத்த பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான நடைமுறைகளுடன் இயலக்கூடியளவில் இணங்கியதாக இருக்க வேண்டும்.

அந்த ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) பொருத்தமான கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாது 2011 சனவரியிலிருந்து அலுவலக நோக்கங்களிற்காக மாகாண சபையால் வாடகை அடிப்படையில் 26 எண்ணிக்கையான கட்டிடங்கள்

எடுக்கப்பட்டிருந்ததுடன் 2011 முதல் 2014 ஆம் ஆண்டுகளிற்கான வாடகையாக ரூபா 25 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலை மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தாபனக்கோவையின் ஏற்பாடுகளிற்கு முரணாக அந்த வீடுகளில் வசித்திருந்த செயலாளர்களிடமிருந்து ரூபா 500 மாதாந்த வாடகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஒரு செயலாளருக்கு ரூபா 250,000 க்கு (அண்ணளவாக) மேலதிக பெறுமதி கொண்ட வீட்டுப் பாவனைப் பொருள்களுடன் முற்றாக தளபாட வசதி கொண்ட வாடகைக்கு எடுத்த வீடுகளாக உள்ளதுடன் அந்த வீடுகளின் மின்சாரம் மற்றும் தண்ணீர் பட்டியல்களும் மாகாணசபை நிதிகளில் செலுத்தப்பட்டிருந்தது. தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் வாடகைக்கமர்த்தப்பட்ட வீடுகளில் குடியிருப்பதற்காக செயலாளர்களிடமிருந்து வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மின்சாரம் மற்றும் தண்ணீர் பட்டியல் அவர்களால் தீர்க்கப்பட வேண்டியிருந்தது.

(இ) தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை ஸ்தாபிக்காத போது 2013 ஆம் ஆண்டின் பிராந்திய ஆணையாளர்களிற்கான பதவியணி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை நிருவாக சேவை அலுவலகங்கல்லாத மீள் நியமனம் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவுற்கான பிராந்திய ஆணையாளர்களாகக் பிராந்திய ஆணையாளர்களின் கடமைகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில். 2011 மே 11 ஆம் திகதிய 9/2007 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக வாகனப் பராமரிப்பு, எரிபொருள் மற்றும் ஏனைய அலுவலக பேணுகை செலவினங்களிற்கு மேலதிகமாக சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 9,095,424 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பிராந்திய ஆணையாளர்களரால் செய்யப்பட்ட செயலாற்றல்/ கடமைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. வருமான முகாமைத்துவம்

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கடந்த ஐந்து ஆண்டுகளின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் கீழே தரப்பட்டுள்ள.

| விபரங்கள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வரி வருமானம் | 1,754.66 | 1,410.33 | 1,532.01 | 1,228.77 | 77.21 |
| வரியற்ற வருமானம் | 111.80 | 121.88 | 116.68 | 84.00 | 77.98 |
| **மொத்தம்** | **1,866.46** | **1,532.21** | **1,648.69** | **1,312.77** | **155.19** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2014 ஆம் ஆண்டிற்காக மதுபான அனுமதிப்பத்திர கட்டணங்களிடமிருந்தான வருமானம் மாகாண சபையின் வருடாந்த பாதீட்டில் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் மதுபான அனுமதிப்பத்திரத்திடமிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க வதிவிடங்களிற்கான வாடகை, முற்பணக் கணக்குகளின் வட்டி, வாகன உத்தரவு பத்திரக் கட்டணங்கள் மற்றும் முத்திரைத் தீர்வைகள் போன்றவாறான வருமானங்களான ரூபா 1,866,461,659 தொகை மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் இன்மையால் மாகாண சபையின் நிதியத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(iii) மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானத்திற்கும் இடையில் மீளாய்வாண்டின் போது ரூபா 621,386,791 இலாப வருமான சேகரிப்பு குறைவிற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வீத வரிகள், வரிகள், வாடகைகள் மற்றும் குத்தகைகள் போன்ற பிரதான வளங்களிலிருந்து ரூபா 1,270,711,372 மொத்தமான வட மாகாணத்தின் 01 மாநகர சபை, 05 நகர சபைகள் மற்றும் 28 பிரதேச சபைகள் என்பவற்றிலிருந்தான வருமான நிலுவைகள் 2014 திசெம்பர் 31 வரை அறவிடப்படாது இருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டங்கள் | உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எண்ணிக்கை | வருமான நிலுவை |
|---|---|---|
| | | ரூபா |
| யாழ்ப்பாணம் | 17 | 1,021,510,604 |
| முல்லைத்தீவு | 04 | 43,809,393 |
| கிளிநொச்சி | 03 | 24,385,685 |
| வவுனியா | 05 | 82,639,500 |
| மன்னார் | 05 | 98,366,190 |
| | 34 | 1,270,711,372 |

(v) நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரை வரி

நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள் தொடர்பில் மாகாண சபையால் சேகரிக்கப்பட்ட ரூபா 948,275,350 கூட்டு மொத்த தொகைகள் மற்றும் ஆதனங்களை மாற்றுவது தொடர்பில் விதிக்கப்பட்ட முத்திரை வரிகள் உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு அனுப்பாமல் 2014 திசெம்பர் 31 வரை மாகாண வருமான திணைக்களத்தின் சேமிப்பு கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டம் | முத்திரை வரி நிலுவை | நீதிமன்ற தண்டப்பண நிலுவை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| யாழ்ப்பாணம் | 768,755,626 | 30,190,369 |
| முல்லைத்தீவு | 749,000 | 25,833,708 |
| கிளிநொச்சி | 8,460,585 | 2,591,367 |
| வவுனியா | 15,623,590 | 21,218,143 |
| மன்னார் | 73,119,492 | 1,733,470 |
| **மொத்தம்** | **866,708,293** | **81,567,057** |

(vi) போக்குவரத்து வசதி ஏற்பாடுகளிற்காக மாகாண சபையின் உத்தியோகத்தர்களிடமிருந்தான சேகரிப்புகள்

மாகாண சபைகளால் உத்தியோகத்தர்களிற்கு உத்தியோகத்தர்கள் போக்குவரத்து வசதிகள் வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், உத்தியோகத்தர்களிடமிருந்தான வருமான சேகரிப்பு இலங்கை போக்குவரத்து சபையால் நிர்ணயிக்கப்பட்ட வீதங்களின் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் நான்கு பஸ்கள் ரூபா 6.3 மில்லியன் கிரயத்தில் உள்ளூர் சேவைகளிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மூன்று பஸ்கள் ரூபா 6.1 மில்லியன் கிரயத்தில் மாவட்ட போக்குவரத்து சேவைகளிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உத்தியோகத்தர் போக்குவரத்து சேவைகளில் சேகரிக்கப்பட்ட ரூபா 3.2 மில்லியன் வருமானம் மொத்த செலவினத்தில் 26 சதவீதத்தை விடக் குறைவாக இருந்தது. ஆகவே, போக்குவரத்து சேவைகள் வருமான உத்தியோகத்தர்களால் முறைப்படி திட்டமிடப்பட்டு நிர்வகிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 4. நிதிசார் மீளாய்வு

### 4.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் மாகாண சபை நிதியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்காக ரூபா 94,044,004 ஆன மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 356,635,921 ஆன மிகையை விளைவித்திருந்தது. ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 262,591,917 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2,248,104,465 ஆல் அரசாங்க மானியங்கள் மற்றும் ரூபா 344,330,899 ஆல் வரி வருமானம் என்பவற்றின் அதிகரிப்பு நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான பங்களித்திருந்தது.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்காக மாகாண சபையின் மொத்த செலவினம் ரூபா 15,892 மில்லியனானதுடன் அதில் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 13,925 மில்லியன் ஏற்பட்டிருந்ததுடன் இது மொத்த செலவினத்தில் 88 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. மொத்த மீண்டெழும் செலவினத்தில், ஆளணி வேதனத்திற்காக ரூபா 10,642 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்ததுடன் இது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 76 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் முன்னைய ஆண்டிற்கான நோரொத்த செலவினம் ரூபா 12,002 மில்லியனானதுடன் இது ஆண்டிற்கான மொத்த செலவினத்தின் 88 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

## 4.3 கட்டமைக்கப்பட்ட நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

**வருமானம்**

| வருமான விடயம் | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| | **பாதீடு** | **உண்மை யானவை** | **முரண்** | **பாதீடு** | **உண்மை யானவை** | **முரண்** |
| | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** |
| வரியுள்ள மற்றும் வரியற்ற வருமானம் | 1,949 | 1,866 | (83) | 2,088 | 1,532 | (556) |
| அரசாங்க மானியங்கள் | 14,647 | 14,382 | (265) | 12,653 | 12,134 | 519 |
| | 16,546 | 16,248 | (348) | 14,741 | 13,666 | (37) |

**செலவினம்**

| மீண்டுவரும் செலவினம் | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| | **பாதீடு** | **உண்மை யானது** | **முரண்** | **பாதீடு** | **உண்மை யானது** | **முரண்** |
| | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** |
| ஆளுக்குரிய வேதனங்கள் | 10,788 | 10,642 | 146 | 10,085 | 9,317 | 768 |
| ஏனையவை | 3,803 | 3,283 | 520 | 2,798 | 2,685 | 113 |
| உப மொத்தம் | 14,591 | 13,925 | 666 | 12,883 | 12,002 | 881 |
| மூலதன செலவினம் | 2,005 | 1,967 | 38 | 1,858 | 1,570 | 288 |
| இறுதி மொத்தம் | 16,596 | 15,892 | 704 | 14,741 | 13,572 | 1,169 |

## 5. தொழிற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மோட்டார் வாகன வருமான அனுமதிப்பத்திரங்களின் கீழான வருமான நிலுவை மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) பயன்படுத்தப்படாத நிதி ஏற்பாடுகள்

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 34 செலவினத் தலைப்புக்களின் கீழ் ரூபா 784,291,612 கூட்டுமொத்ததொகையான முழு ஏற்பாடும் நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டவாறு பாதீட்டு வழிகாட்டல்கள், மாகாண நிதி விதிகள் மற்றும் மாகாண தேவைகள் என்பவற்றினை கருத்திற்கொள்ளாமல் பாதீட்டு பிரேரணைகள் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணமாக குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 12 செலவின விடயங்களின் கீழ் பெறப்பட்ட ரூபா 11,011,251 தொகையான குறைநிரப்பு ஏற்பாடுகள் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) அங்கீகாரமற்ற செலவினங்கள்

ஏற்பாடுகளில்லாமல் 14 நிறுவனங்களால் ரூபா 116,716,302 கூட்டுமொத்தத் தொகையான மூலதன செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் மிகையறவீட்டு கணக்குகளுடாக ஆண்டுறுதியில் செலவினம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

### 5.2. செயற்பாட்டுத் திறமையீனங்கள்

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் 45 சிறுவர் இல்லங்கள் செயற்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், பதிவுசெய்யாமல் செயற்படுத்தப்படுகின்ற 14 பதிவுசெய்யப்படாத சிறுவர் இல்லங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3. சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அனுமதிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், எஸ்எல்-1 சம்பள மட்டத்திற்காக சட்ட ஆலோசனையாளர் தகுதி பெற்றிருந்த போதிலும் அவர் மாதாந்தம் ரூபா 50,000 சம்பள கொடுப்பனவில் ஒப்பந்த அடிப்படையில் ஆளுருடைய செயலாளருக்காக நியமிக்கப்பட்டிருந்தார். எனவே, அவருக்கு ரூபா 324,780 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சட்ட ஆலோசனையாளர் பதவிக்கான நியமன வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதினப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ii) அனுமதிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், எஸ்எல்-1 சம்பள மட்டத்திற்காக இன்னொரு சட்ட ஆலோசனையாளர் தகுதி பெற்றிருந்த போதிலும் அவர் மாதாந்தம் ரூபா 75,000 சம்பள கொடுப்பனவில் ஒப்பந்த அடிப்படையில் பிரதம செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்தார். எனவே, அவருக்கு ரூபா 624,780 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சட்ட ஆலோசனையாளர் பதவிக்கான நியமன வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதினப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(iii) எந்தவொரு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடனும் இணங்காமல், ஆளுனரால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக்கொண்டு ஆளுநர் செயலாளரால் தகவல் ஒருங்கிணைப்பாளருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 430,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iv) எந்தவொரு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடனும் இணங்காமல், ஆளநரால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக்கொண்டு ஆளுநர் செயலாளரால் ஊடக ஆலோசனையாளருக்கு செய்திகள் திருத்தல் கட்டணங்களாக மீளாய்வாண்டின் போது ரூபா 182,400 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(v) எந்தவொரு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடனும் இணங்காமல், ஆளுநரால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக்கொண்டு ஆளுநர் செயலாளரால் மும்மொழிகள் கற்பித்தல் நிலையத்தின் பணிப்பாளருக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 265,161 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(vi) கல்விசார் கருத்தரங்குகளிற்காக லிக்கர் மற்றும் குடிபானங்களிற்காக மாகாண கல்வி அமைச்சால் ரூபா 54,795 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(vii) பொது மக்கள் நிதியிலிருந்து அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிற்கு நலன்புரி விடயங்களை வழங்குவதற்காக விதிகள் மற்றும் பிரமாணங்களில் ஏற்பாடுகள் இல்லாத போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்படுகின்ற நலன்புரி விடயங்களிற்காக ஆளுநர் செயலாளரால் ரூபா 941,375 கூட்டுமொத்த தொகையான செலவினம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(viii) மாகாண வீதி செயற்திட்டங்கள்

(அ) முன்னைய ஆண்டில் ஒப்பந்தகாரர் பூர்த்தியாக்கப்பட்டிருந்த ஒப்பந்த பொதி ரூபா 68 மில்லியனான மேலதிக கோரிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது பிரயோகிக்கப்பட்ட நடுவர் தீர்ப்பு நடைமுறைகள் 2015 ஏப்ரல் 30 வரையும் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை.

(ஆ) சண்டிலிப்பாய்- கந்தரோடை வீதி, குப்பிளான்- குரும்பசிட்டி வீதி என்பவற்றின் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்கள் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் 2013 திசெம்பரில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புரிந்துணர்வு விஞ்ஞாபனம் 2014 ஒக்தோபர் 10 இலேயே வட மாகாண சபையுடன் ஒப்பந்தகாரரால் கைசாத்திடப்பட்டிருந்தது.

(ix) வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (என்ஆர்சீபி)

(அ) 00+000 கிலோ மீற்றர் தொடக்கம் 27+400 கிலோமீற்றர் வரையான வல்லை தொடக்கம் அராலி வீதி வரையான புனரமைப்பிற்கான ஒப்பந்தம் 2011 மே மாதத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 4+140 கிலோ மீற்றர் தொடக்கம் 9+200 கிலோமீற்றர் வரையான வீதிப் பிரிவுகளின் புனரமைப்பு பாதுகாப்பு காரணங்களால் பின்னர் மீளப்பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் முன்னங்கீகாரம் இல்லாமல் கிள்நொச்சி பகுதியிலிருந்து புனரமைப்பு வேலைகளிற்காக முழு மண் தேவைகளையும் ஏற்றியிறக்கியிருந்தது. இதன்விளைவால், செயற்திட்டத்திற்கும் ஒப்பந்தகாரருக்கும் இடையில் தகராறு எழுந்திருந்ததுடன் இது ஒப்பந்தகாரருக்கு ரூபா 91.20 மில்லின் தொகையும் நடுவர்களிற்கு ரூபா 1.62 மில்லியன் தொகையும் செலுத்துவதற்கான உடன்படிக்கையுடன் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 115 சதவீதத்தால் அடர்த்தியான தரப்படுத்தப்பட்ட திரட்டு அடிப்படையில் இடுவதற்காக அளவீட்டு பட்டியலில் குறிப்பிடப்பட்ட வீதங்கள் அதிகரித்தல் தொடர்பில் 2011 மே 10 இல் வழங்கப்பட்ட தேணிக்ல் முதல் கற்குளம் வரையான வீதிப் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்களில் மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக இன்னொரு தகராறு எழுந்திருந்தது. ஆகவே, செயற்திட்டமானது 2013 திசெம்பரில் வருகைதந்திருந்த மீள்குடியேற்றங்களின் அடிப்படையில் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக ரூபா 25.70 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய தகராறு வடிவமைப்பு ஆலோசனையாளரால் தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியல் பூர்த்தியாக்காமையால் எழுந்திருந்ததுடன் பொறுப்புடைய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் வெளிப்பட்டது.

(x) இலங்கையில் வடக்கு மாகாணத்தில் போசாக்கை முன்னேற்றுவதற்கான உள்நாட்டு மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டம் (ஜேஎஸ்டிஎவ்)

(அ) வட மாகாண சுகாதார அமைச்சு அலுவலகத்தின் வாகனக் குழாமில் 08 மோட்டார் வாகனங்களை கொண்டிருந்த போதிலும் போசாக்கு தலையீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னேற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட மானிய பெறுகைகளில் 2014 யூன் 30 இல் ரூபா 9.4 மில்லியன் கிரயத்தில் ஒரு வான் கொள்வனவு செய்யப்பட்டது.

(ஆ) மாகாண சுகாதார அமைச்சின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் தபால் கவர்கள் வழங்கல், அச்சிடல் மற்றும் கட்டுதல் போன்ற செலவினங்களை செய்வதற்கு தனித்தனியான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தகைய செலவினங்களிற்கு செயற்திட்டத்தால் ரூபா 1.39 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தபால் கவர்களின் விநியோகம் மற்றும் கையிலுள்ள இருப்பு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

## 5.4 வெளிப்படையான முறையீனங்கள்

(i) மேலதிக எரிபொருள் படிகள் கொடுப்பனவு ரூபா 179,747

(அ) வட மாகாணத்தின் பிரதம செயலாளருக்கு பெற்றோல் வாகமொன்றிற்காக ரூபா 36,585 ஆன மாதாந்த எரிபொருள் படி

செலுத்தப்பட்டிருந்தது அங்கு பிரதம செயலாளருக்கு டீசல் வாகனமொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், டீசல் வாகனத்திற்கு பதிலாக பெற்றோல் வாகனத்திற்கு எரிபொருள் படி செலுத்தப்படுகின்றமை காரணத்தால் ரூபா 110,475 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வட மாகாணத்தின் பிரதம செயலாளருக்கு 225 லீற்றர் மாதாந்த எரிபொருள் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட வாகனங்களிற்கு எரிபொருள் பெறுவதற்கு எரிபொருள் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், பெறப்பட்ட மேலதிக எரிபொருளிற்காக ரூபா 69,272 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) வேலை நேரங்களின் போது கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு மாகாண கல்வி பணிப்பாளரின் கீழ் வேலைசெய்கின்றவர்களிற்காக தாபனவிதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் III ஆம் பிரிவிற்கு முரணாக வள நபர்களிற்கு ரூபா 227,150 ஆன கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) ஆளுநருடைய சமயோசித செயற்திட்டதிலிருந்தான செலவினம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆளுநருடைய சமயோசித செயற்திட்டதிலிருந்து செலவழித்த ரூபா 4,690,150 தொகையான செலவினங்கள் தொடர்பில் கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **கொடுப்பனவுத் தன்மை** | **தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| 1000 எண்ணிக்கையான தகர விரிப்புகள் | 1,190,000 |
| கை பந்து, வலைப்பந்து, கூடை பந்து மைதானங்களின் நிர்மாணம் | 3,000,000 |
| 5 எண்ணிக்கையான தையல் இயந்திரங்கள் | 107,495 |
| 2 எண்ணிக்கையான சைக்கிள்கள் | 25,200 |
| சிறுவருடைய விளையாட்டுப் பொருட்கள் | 367,455 |
| | 4,690,150 |

-------------------

மேற்குறிப்பிட்ட கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், அவற்றினை விநியோகிக்கப்பட்ட நலனாளிகள் பட்டில் மற்றும் பெறுகைகளின் பெற்றுக்கோடல்கள் போன்ற ஆவணச்சான்றுகள் கணக்காய்விற்குகிடைத்திருக்கவில்லை.

(iv) வாடகைக்கமர்த்தப்பட்ட கட்டிடங்களில் நிர்மாண வேலைகள்

ரூபா 1,586,038 கிரயத்தில் தனியார் தரப்பினரால் உடமையாக்கப்பட்ட வாடகைக்கமர்த்தப்பட்ட கட்டிடங்களில் தற்காலிக கூடாரம், வாகன தரிப்பிடங்கள் மற்றும் சைக்கிள் கூடாரம் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | செய்யப்பட்ட வேலையின் தன்மை | கிரயம் |
|---|---|---|
| | | ரூபா |
| பிரதி பிரதம செயலாளர்- நிர்வாகம் | தற்காலிக கூடாரங்களின் நிர்மாணம் | 258,096 |
| பிரதி பிரதம செயலாளர்- திட்டமிடல் | வாகன தரிப்பிடங்கள் மற்றும் சைக்கிள் கூடாரங்களின் நிர்மணம் | 477,111 |
| பிரதி பிரதம செயலாளர்- நிதி | கூடாரங்களின் நிர்மாணம் | 116,520 |
| ஆளுநர் செயலகம் | வாகன தரிப்பிடங்களின் நிர்மாணம் | 119,872 |
| முதலமைச்சர் அமைச்சு | வாகன தரிப்பிடங்களின் நிர்மாணம் | 614,439 |
| | | 1,586,038 |

(v) மாகாண நிதியத்திலிருந்து தனியார் கட்டிடமொன்றினை (வீரசிங்கம் மண்டபம்) புதுப்பித்தல்

தனியார் கட்டிடத்தின் (வீரசிங்கம் மண்டபம்) புதுப்பித்தல் வேலைக்கான கேள்வி நடைமுறையை கருத்திற்கொள்ளாமல் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படை தலைமை

அலுவலகத்தின் 51 ஆவது பிரிவுக்கு ரூபா 12.52 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது. இது தொடர்பில் பற்றுச்சீட்டுக்கள், விலை பட்டியல்கள், செய்யப்பட்ட வேலை சான்றிதழ்கள் போன்ற செலவினங்களிற்கான சான்றுகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) யாழ்ப்பாணத்தில் விசேட மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 981,355

---

கொடுக்கல் வாங்கல்களின் சிக்கனத்தை கருத்திற்கொள்ளாமல் விசேட மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் தெடார்பில் மாகாண சபை நிதியிலிருந்து பின்வரும் செலவினங்கள் ஏற்பட்டிருந்தது.

| நிறுவனங்களின் பெயர் | கொடுப்பனவுத் தன்மை | தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| தல்சேவன விடுமுறை விடுதி | தேனீர் உபசாரம் மற்றும் மதிய போசனம் | 149,000 |
| பிஆர்ஜ 57 ஆவது பிரிவு | சாரதிகள் மற்றும் பாதுகாப்பு படையினருக்கான தேனீர் மற்றும் விசேட மதிய போசனம் | 82,000 |
| பிஆர்ஜ 51 ஆவது பிரிவு | உணவுப் பொருட்கள் | 3,555 |
| கக்ஸ்ரோன் அச்சிடும் கருவி | அட்டை தயாரித்தல் | 155,300 |
| கக்ஸ்ரோன் அச்சிடும் கருவி | புதிய அட்டை தயாரித்தல் மற்றும் பிலெக்ஸ் அச்சிடல் | 35,400 |
| ஜனா டிஜிரல் அச்சிடல் | பதாகை அச்சிடல் | 54,600 |
| ஜனா டிஜிரல் அச்சிடல் | விளம்பர வடிவமைப்புக் கட்டணம் | 70,400 |
| தருனா டிஜிரல் ஊடக வேலைகள் | பிலெக்ஸ் அச்சிடல் | 17,600 |

| | | |
|---|---|---|
| தருனா டிஜிரல் ஊடக வேலைகள் | வீரசிங்கம் மண்டபத்தில் நுழைவாயிலில் உருவப்படம் வைத்தல் | 71,000 |
| கரீஸ் தோட்டம் | தாவரங்களுடன் தொட்டி | 89,000 |
| பாஸ்கரன் சிற்பாலயம் | சிலை செய்தல் கட்டணம் | 145,000 |
| கரீஸ் தோட்டம் | தாவரங்களுடன் தொட்டி | 8,500 |
| எஸ்கேஎஸ் நிர்மாணம் | நல்வரவு ஆக் தயாரிப்பு | 85,000 |
| நுஹா திரைச்சீலை பசன் | திரைச்சீலை வேலைகள் | 15,000 |
| | | 981,355 |

மேலும், மேற்குறிப்பிட்ட செலவினம் 400-03-02-1703 ஆம் தற்செயலான வாக்குப் பண விபரங்களிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்த போதிலும், மூல உறுதிச்சீட்டுக்கள், விலைப்பட்டியல், வேலை பூர்த்தியாக்கல் சான்றிதழ், கொடுப்பனவிற்கான பெற்றுக்கோடல்கள் மற்றும் பொருளிருப்புச் சான்றிதழ் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(vii) வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்தின் மீதான முறையீனங்கள் மற்றும் முறைகேடுகள்

செயற்திட்ட பொறியியலாளர் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் தலைவராக இருந்ததுடன் ஒப்பந்தங்களிற்கான பல கொடுப்பனவுகளை சிபாரிசு செய்திருந்தார். எவ்வாறாயினும், அந்த ஒப்பந்தங்கள் அவருடைய தந்தைக்கு சொந்தமான ‘‘எம்/எஸ் ஸ்கார்லெட் பொறியியல்’’ நிர்மாணக் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கம்பனியினுடைய வங்கிக் கணக்கை செயற்திட்ட பொறியியலாளரால் அவருடைய தற்துணிவில் செயற்படுத்திருந்தார். செயற்திட்ட வேலைகள் மீதான அக்கறையின் தகராறு தொடர்பான தகவல்கள் செயற்திட்ட பொறியியலாளரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட வேலைகள் மீதான அக்கறையின் தகராறு காரணமாக பின்வரும் துஸ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(அ) வேலைகளின் மேலதிக பட்டியல் வீதங்கள் (ஈஎஸ்ஆர்) அக்கறை தகராற்றினை கருத்திற்கொள்ளாமல் பெயற்திட்டப் பணிப்பாளருக்கு பதிலாக செயற்திட்ட பொறியியலாளரால் அனுமதிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உரிய அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் பீ என்பலப்பில் பல திருத்தங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட தொகையில் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

(இ) ரூபா 1.14 மில்லியன் பெறுமதிக்கு 04 எண்ணிக்கையான ஈஎஸ்ஆர் கொடுப்பனவுகள் மன்னடி சந்தை மற்றும் கடைத்தொகுதி நிர்மாணத்திற்காக செயற்திட்ட பொறியியலாளரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் செய்யப்பட்டிருந்தது. இந்த வேலைத்தளத்தில் மேலதிக வேலைகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) ‘‘எம்/எஸ் ஸ்கார்லெட் பொறியியல்’’ நிர்மாணக் கம்பனிக்கு வழங்கப்பட்ட அதிகளவான நிர்மாண வேலைகள் ஒப்பந்த உடன்படிக்கைக்கு முரணாக வேறு நிர்மாண நிறுவனங்களிற்கு உப ஒப்பந்தங்களிற்கு விடப்பட்டிருந்தது.

(உ) மிகவும் உயர்ந்த வீதங்களில் செயற்திட்ட பொறியியலாளரால் ஒப்பந்தகாரருக்கு மேலதிக வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உயர்ந்த வீதங்கள் செயற்திட்ட பொறியியலாளரால் அவருடைய தற்துணிவில் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது பல மில்லியனை ஈடுபடுத்தி செயற்திட்ட அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட துஸ்பிரயோகங்கள் உரிய அதிகாரிகளால் புலனாய்வுகள் செய்யப்பட்டிருக்காததுடன் அந்த துஸ்பிரயோகங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்ட உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) ஆளுநருக்கு செலுத்தப்பட்ட எரிபொருள் படி

ஆளுநர் ரூபா 264,500 ஆன மாதாந்த எரிபொருள் படிக்கு மாத்திரம் தகுதியுடைய போதிலும் சனாதிபதி செயலகத்தின் 2010 மே 14 ஆம் திகதிய சீடி/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக ஆளுநருக்கு ரூபா 247,400 தொடக்கம் ரூபா 497,600 வீச்செல்லை கொண்ட மாதாந்த எரிபொருள்படி

செலுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவாக, மீளாய்வாண்டின் போது ரூபா 1,714,840 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அரசாங்க வாகனங்களிற்கு சுப்பர் பெற்றோலை வழங்குவதற்கு சுற்றுநிருபத்தில் ஏற்பாடுகள் இல்லாதிருந்த போதிலும் சுப்பர் பெற்றோல் கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆளுநருக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 50,000 ஐ விஞ்சி மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் படியில் உழைக்கும் போதே செலுத்தும் வரியும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ix) ரூபா 50,000 மாதாந்தப் படியில் ஆளுநர் செயலாளருக்கு சட்ட ஆலோசகர் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது சட்டச் செலவினமாக தனியார் ஆலோசகர் ஒருவருக்கு ரூபா 143,780 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(x) பாடநெறிக் கட்டணங்களின் மீளளிப்பு

---

சேவைக் குறிப்புக்கள் பதவி உயர்விற்கு தேவையானதாக பொறியியல் உயர் டிப்ளோமா பாடநெறியை குறிப்பிடப்பட்டிருக்காத போதிலும் மேற்குறிப்பிட்ட பாடநெறியை பின்பற்றுவதற்கு ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு ரூபா 150,000 ஆன தொகை மீளளிக்கப்பட்டிருந்தது.

(xi) மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

---

சிறப்புரிமை அளிக்கப்பட்ட சிறுவர்களிற்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு உதவியளிப்பதற்காக நி.பி 138 இன் பிரகாரம் கொடுப்பனவை சான்றுபடுத்தாமல் 2013 ஆம் ஆண்டில் வட மாகாணத்தில் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளரால் யாழ்ப்பாணம் பிஆர்ஜ பாதுகாப்பு படை தலைமை அலுவலகத்திற்கு ரூபா 5 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த ரூபா 5 மில்லியன் கொடுப்பனவை நியாயப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்கள் கிடைத்திருக்கவில்லை.

(i) மதிப்பாய்வு செய்யப்பட்ட இலக்கு குழு

(ii) கிரம சேவகர்/ பிரதேச செயலகங்களின் சிபார்சு

(iii) உரிய அமைச்சால் ஒவ்வொரு தெரிவு நியமத்தின் கீழான தெரிவு விபரங்கள்

(iv) உரிய பாடசாலை அதிபர்கள் மற்றும் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் என்போரிடமிருந்தான கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு அறிக்கை.

(v) உரிய பாடசாலை அதிபர்களால் முன்வைக்கப்பட்ட மாணவர் தெரிவு முன்னேற்றம்

(vi) ஏற்கனவே நலனளிக்கப்பட்ட புலமைப்பரிசாளர்களின் பட்டியல்

(vii) புலமைப்பரிசில் பெறுபவர்களிடமிருந்து அல்லது தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் சார்பில் பெற்றுக்கோடல்கள்/ நிரூபிக்கப்பட்ட ஆவணங்கள்

(viii) யாழ்ப்பாணம் பாதுகாப்பு படை தலைமை அலுவலகத்திற்கு ரூபா 5 மில்லியன் கொடுப்பனவை வழங்குவதற்கு அனுமதி

(xii) வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தால் செய்யப்பட்ட ரூபா 4,418,506 ஆன மோசடிக் கொடுப்பனவு

---

வட மாகாணத்தில் 34 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் 03 தொடர்பில் சிவில் வேலைககளிற்கான கொடுப்பனவுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனை கேள்வி ஆவணங்களில் ஒவ்வொரு அளவீட்டு பட்டியலிற்கான வீதங்கள் திருத்தம் செய்வதன் மூலம் ரூபா 4,418,506 ஆன மோசடிக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டமையும் அந்த கொடுப்பனவுகள் இதன்படி செய்யப்பட்டிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(xiii) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி நிகழ்ச்சித்திட்ட காலத்தின் போது ஜே/ ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலைக்கு இணைக்கப்பட்ட ஆங்கில ஆசிரியருக்கு ரூபா 105,345 கூட்டுமொத்த தொகையான சம்பள கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. ஆனால், கல்வி நிகழ்ச்சித்திட்ட காலத்தின் போது 2012 யூன் 06 தொடக்கம் 2012 ஒக்தோபர் 10 வரை (04 மாதங்கள்) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தரால் வேலை நிறுத்தம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்ததுடன் இந்த காலத்தின் போது ஆசிரியர் கடமைகளிற்கு திரும்பி வராமல் சம்பளங்களை பெற்றிருந்தார்.

(xiv) போலியான கல்வி தகைமை பெறுபேற்றுத் தாள் சமர்ப்பித்தமை காரணமாக 2000 யூன் மாதத்தில் ஜே/ வட்டு மத்திய கல்லூரியின் ஆசிரியர் ஒருவர் இடைநிறுத்தப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், 1992 ஒக்தோபர் 01 முதல் 2000 மே 31 வரையான காலத்திலிருந்து விசாரணை நடாத்துவதற்கோ அல்லது அவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 286,737 கூட்டுமொத்த தொகையான சம்பளங்களை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5. திணைக்களத்தின் நோக்கங்களிற்கு புறம்பான செலவினம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஆளுநர் செயலகத்தின் நோக்கங்களிற்கு புறம்பான கொடுக்கல் வாங்கல்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 8,279,632 கூட்டு மொத்தத் தொகையான செலவினம் ஏற்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **கொடுப்பனவுகளின் தன்மை** | **தொகை ரூபா** |
|---|---|
| றெடிமேட் தார் கலவை | 4,888,332 |
| சப்பாத்துகள்- பிளானட், ஏசர், பீ பெஸ்ட் | 979,200 |
| உணவு பொருட்கள் | 998,500 |
| சிறுவர் உடைகள் | 1,000,000 |
| யாழ்ப்பாணம் நாகவிகாரை புதுப்பித்தல் நிதியத்திற்களை யன்னல் சட்டம் மற்றும் கதவு | 282,000 |
| சனாதிபதியின் 9 ஆவது ஆண்டு நிறைவிற்கான புதினப்பத்திரிகை விளம்பரம் | 131,600 |
| | **8,279,632** |

கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் மேற் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள் மீது கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், மேற்குறிப்பிட்ட கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் நோக்கங்கள் நலனாளிகளின் பட்டியல், பெறுபவர்களின் பெற்றுக்கோடல்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நோக்கங்களிற்கு புறம்பாக உள்ள கொடுக்கல் வாங்கல்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,206,119 கூட்டு

மொத்தத் தொகையான செலவினம் ஏற்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு / திணைக்களம் | கொடுப்பனவு தன்மை | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | தொகை ரூபா |
|---|---|---|---|
| கல்வி அமைச்சு | போகஸ்வாவ மீள்குடியேற்றம் மற்றும் இந்து கோவில்களில் பாடசாலை நிகழ்ச்சி செலவுகள் | 02 | 323,414 |
| கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | தெயட்ட கிருலவிற்கான தங்குமிட கட்டணம் | 12 | 672,205 |
| முதலமைச்சர் அமைச்சர் | உயர்ஸ்தானிகரின் பிரியாவிடைக்கான டயறிகள் அச்சிடல் | 03 | 210,500 |
| | | **17** | **1,206,119** |

## 5.6. போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 16 பயன்படுத்தமுடியாத வாகனங்களின் ஏலம்

வட மாகாண சபைக்கு சொந்தமான பதினாறு வாகனங்கள் ரூபா 5,095,000 மதிப்பீட்டு அடிப்படையில் பொது ஏலத்தின் ஊடாக ரூபா 5,412,232 இற்காக விற்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வாகனங்கள் பயன்படுத்த முடியாதவையாக கணிப்பீட்டுச் சபை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 10 வாகனங்களின் உரிமையாண்மை நிர்வாக தாமதங்கள் காரணமாக 39 மாதங்கள் கடந்த பின்னரும் வாகனங்களை வாங்குவோருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. பின்னர், இரண்டு கொள்வனவாளர்கள் உரிமையாண்மை மாற்றுவது தொடர்பில் புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் சமார்ப்பிக்காமைக்காக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் பிரதம செயலாளருக்கு எதிராக வழக்கு தொடர்ந்திருந்தனர்.

(ii) ஒதுக்கப்பட்ட வாகனம் இல கேஎக்ஸ் 0299 மேலதிக எரிபொருள் கொடுப்பனவு

கேஎக்ஸ் 0299 இலக்கம் கொண்ட வாகனம் வடமாகாண பிரதம செயலாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 36,585 ஆன மாதாந்த எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. மாதாந்த எரிபொருள் படிக்கு மேலதிகமாக, மீளாய்வாண்டின் போது இந்த வாகனங்களிற்கு ரூபா 477,537 பெறுமதிக்கு மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2008 யூன் 28 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், மாகாணசபைகள் அமைச்சு செயலாளரிடமிருந்து முன்னங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரயாண கோரிக்கை ரூபா 254,750

ஆளுநர் செயலகத்தின் பிரதான அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்தாலும், கிளிநொச்சி, வவுனியா மற்றும் கொழும்பில் உப அலுவலகங்கள் அமைந்திருந்த போதிலும் ஆளுநர் மற்றும் ஒருங்கிணைப்பு செயலாளரால் கொழும்பு மற்றும் வெளியிடங்களில் 426 நாட்களிற்காக செலவழித்த ரூபா 254,750 தொகையான பிரயாண கோரிக்கைகள் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில், கொழும்பில் உத்தியோகபூர்வ கடமைகளிற்கான முன்னங்கீகாரம், ஆளுநர் மற்றும் ஒருங்கிணைப்பு செயலாளரால் கொழும்பில் செயலாற்றிய கடமைகளின் தன்மை கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பதவிகள்** | **காலப்பகுதி** | **கொழும்பில் செலவழித்த நாட்களின் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட இணைந்த படிகள்** |
|---|---|---|---|
| | | | **ரூபா** |
| கௌரவ ஆளுநர் | சனவரி - நவம்பர் (11 மாதங்கள்) | 223 | 135,250 |
| ஒருங்கிணைப்பு செயலாளர் | சனவரி – ஆகஸ்ட் ஒக்தோபர் - நவம்பர் (10 மாதங்கள்) | 203 | 119,500 |
| | | 426 | 254,750 |

(iv) செயலாளருடைய வதிவிடத்தின் மின்சார பட்டியல்

கல்வி அமைச்சு செயலாளரால் அவருடைய தனிப்பட்ட வதிவிடத்தின் தனிப்பட்ட பாவனை தொடர்பில் இரண்டு மின்சார மீற்றர்களிற்காக ரூபா 74,503 ஆன தொகை மீளளிக்கப்பட்டிருந்தது.

(v) மொழிபெயர்ப்பு கொடுப்பனவு

மாகாண சபையில் வேலை செய்திருக்காத தனிப்பட்டவருக்கு உரிய அதிகாரியிடமிருந்து அனுமதி பெற்றுக் கொள்ளாமல் மொழி பெயர்ப்புக் கட்டணமாக காணி நிர்வாக திணைக்களத்தால் ரூபா 80,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொடுப்பனவு அடிப்பயை மற்றும் மொழி பெயர்ப்பு விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

## 5.7. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(i) மீளாய்வாண்டின் போது அத்தியாவசிய தேவைகள் மற்றும் சிக்கன வீதங்கள்/ விலைகள் என்பவற்றினைக் கருத்திற்கொள்ளாமல் 04 அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களால் ரூபா 6,537,650 கூட்டு மொத்த தொகையான செலவினம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ii) டயலக் தொலைக்காட்சிக்கான கொடுப்பனவு

மீளாய்வாண்டின் போது ஆளுநர் செயலகத்தின் அலுவலகம், உப அலுவலகம் மற்றும் சுற்றுலா விடுதிக்களுக்கு வழங்கப்பட்ட 09 டயலக் தொலைக்காட்சிகளிற்காக மாகாணசபை நிதியிலிருந்து ரூபா 262,155 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ஆளுநருடைய வங்களா, அலுவலகம், உப அலுவலகம் மற்றும் ஆளுநர் செயலாளரின் வதிவிடம் என்பவற்றிற்கு மின்சாரம் வழங்குவதற்காக ஏற்பட்ட செலவினம்

2012 பெப்ரவரி 16 இல் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட 156 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மின்சார கட்டணங்களாக ரூபா 3,557,586 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் ஒருமாதத்திற்கு மின்சார கட்டணமாக ரூபா 296,466 தொகை அண்ணளவாக ஏற்பட்டிருந்தது.

(iv) விமான சீட்டுக்களிற்காக ஏற்பட்ட செலவினம்

நாட்டிற்குள் பொதுப் போக்குவரத்து கிடைத்திருந்த போதிலும் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் V ஆம் பிரிவுக்கு முரணாக நாட்டிற்குள் கெலிகொப்ரர் மூலம் பிரயாணம் செய்வதற்கு விமானச் சீட்டு கட்டணங்களிற்காக ஆளுநர் செயலகம் மற்றும் பிரதம செயலாளர் செயலகம் என்போரால் ரூபா 113,750 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(v) பொழுதுபோக்கு செலவினம்

மீளாய்வாண்டின் போது சிக்கன வீதங்கள்/ விலைகளைக் கருத்திற்கொள்ளாமல் ஆளுநர் செயலகத்தால் ரூபா 539,752 ஆன பொழுது போக்கு செலவினம் ஏற்பட்டிருந்தது.

## 5.8. நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதியம் உருவாக்குவதற்காக மாகாணசபை ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட விஞ்ஞாபனம் அல்லது மாகாண சபையால் அனுமதிக்கப்பட்ட நியதிச்சட்டத்தை கருத்திற்கொள்ளாமல் வட மாகாணத்தின் ஆளுநர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

(ii) வடமாகாண சபைக்கான ஆளுநர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 2007 சனவரி 01 இலிருந்து செயற்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், முன்னாள் வட கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் 2007 சனவரி 01 ஆந்திகதிய 01/2007 ஆம் இலக்க ஆளுநருடைய விஞ்ஞாபனத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம், வட மாகாணத்தின் ஆளுநர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் பொது மக்கள், அமைப்புக்கள், சங்கங்கள் என்பவற்றின் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் அல்லது பங்களிப்புகள் மற்றும் கையேற்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் என்பவற்றினை கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது மேற்குறிப்பிட்ட வளங்களிலிருந்து அத்தகைய பங்களிப்புகள் பெறப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான ஆளுநர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 22 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக ஆளுநர் நிதிகளில் ரூபா 138,863,531 ஆன தொகை பேணப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வாளர்

தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை 2014 சனவரி 10 ஆந் திகதிய 1/2014 ஆம் ஆளுநருடைய விஞ்ஞானபத்தால் இரத்துசெய்யப்பட்டிருந்தது.

(iii) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள வைப்புக்கணக்குகளில் பேணப்பட்டிருந்த பணத்திலிருந்து ஆளுநர் அவசர நிதியத்தை உருவாக்கல்

குறித்தொதுக்கிய நோக்கத்திற்காக மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்கள வைப்புக்கணக்குகளில் இருந்த பல நிதிகள் ஆளுநர் அவசர நிதியத்தினை உருவாக்குவதற்கு உரிய அதிகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மாற்றப்பட்டிருந்தது. வைப்புக் கணக்கிலிருந்தான நிதிகளின் மாற்றம் மாகாண சபையில் நியதிச்சட்டமொன்று அனுமதிக்காமல் ஆளுநரால் அவசர நிதியமொன்று உருவாக்வுஷகுவதற்கு மாகாண சபை அதிகார சட்டத்திலோ அல்லது வேறு ஏதாவது அதிகாரச் சட்டத்திலோ ஏற்பாடுகள் இல்லாமையால் அனுமதியற்றதாக கருதப்பட்டிருந்தது. மேலும், ஆளுநர் அவசர நிதியத்தை உருவாக்குவதற்கு நிதிகளின் மாற்றத்திற்கான அங்கீகாரம் ஆளுநருடைய தற்றுணிவில் வழங்கப்பட்டிருந்ததுடன் இரண்டு ஆண்டுகளிற்க மேலாக ஆளுநர் அவசர நிதியத்திற்கு மாற்றப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்படாது இருந்தது என அவதானிக்கப்பட்டது. அனுமதிக்கப்படாத மாற்றங்களின் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| **அமைச்சு/ திணைக்களம்** | **வைப்புக்களின் நோக்கம்** | **தொகை ரூபா** | **குறிப்புகள்** |
|---|---|---|---|
| விவசாய அமைச்சு | நீரிறைக்கும் இயந்திர கொள்வனவு | 11,457,360 | 1,600 நீரிறைக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு உணவு மற்றும் விவசாய அமைப்புகளால் (எவ்ஏஓ) பணம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், நீரிறைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப் பட்டிருக்கவில்லை (சுழற்சி நிதியம்) |
| காணி நிர்வாக திணைக்களம் | மிளகாய் மற்றும் தென்னை செயற்திட்டம், விவசாய கிணறு புதுப்பித்தல் | 4,700,000 | செயற்திட்ட வேலை மற்றும் விவசாய கிணறு புதுப்பித்தல் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | கடன்களை வழங்குவதற்கான கடன்களிலிருந்தான அறவீடுகள் | 32,000,000 | வாழ்வாதார கடன் நலனாளிகளிற்காக கடன்கள் வழங்குவதற்காக பயன்படுத்த வேண்டியதற்காக கிடைத்த நிதிகள் முகாமைத்துவ சேவைகளால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| விவசாய திணைக்களம் | எவ்ஏஓ இன் செயற்திட்ட அமுலாக்கல் | 62,135,200 | செயற்திட்ட வேலைகள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | 110,292,560 | |

(iv) குறித்தொதுக்கிய மானியங்களின் பயன்பாடு

2014 திசெம்பரில் மாகாண திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 394.58 மில்லியன் தொகை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தன. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| **நிதிகளின் வகை** | **தொகை** |
|---|---|
| | ரூபா |
| நியமம் அடிப்படையிலான மானியம் | 119,532,637 |
| மாகாண துறை அபிவிருத்தி மானியம் (பிஎஸ்டிஜீ) | 80,429,081 |
| யுனிசெப் | 2,764,392 |
| ஆசிரியர்கள் இரண்டாம்தர கல்வி செயற்திட்டம் (ரீஎஸ்ஈபி) | 183,447,366 |
| 1000 பாடசாலைகள் | 8,405,381 |
| **மொத்தம்** | **394,578,857** |

(v) மாகாண நிதிகளின் பயன்பாடு

(அ) மாகாண சபையின் அபிவிருத்தி வேலை முன்மொழிவுகளிற்காக பல்வேறு மூலங்களிலிருந்து கிடைத்த பாதிடப்பட்ட நிதிகளின் விபரங்கள் மற்றும்

அவற்றின் மீது ஏற்பட்ட உள்ளபடியான செலவுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| **விடயங்களின் விபரம்** | **பாதிடப் பட்டவை** | **உண்மையான செலவினம்** | **சேமிப்பு** | **பயன்பாட்டின் சதவீதம்** |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மாகாண குறித்த அபிவிருத்தி மானியங்கள் (பிஎஸ்டீஜீ) | 1,035,000,000 | 1,023,777,230 | 11,222,770 | 99 |
| கல்வித்துறை அபிவிருத்தி செயற்திட்டம் (ஈஎஸ்டிபீபிறு/ (ரீஎஸ்ஈபி) | 290,000,000 | 286,468,036 | 3,531,964 | 99 |
| வடமாகாண வீதி இணைப்பு செயற்திட்டம் (என்ஆர்சீபீ) | 1,495,600,000 | 662,316,435 | 833,283,565 | 44 |
| ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யூனிசெப்) | 71,777,000 | 50,979,131 | 20,797,869 | 71 |
| மாகாண வீதி செயற்திட்டம் (பிஆர்பீ) | 909,400,000 | 811,160,189 | 98,239,811 | 89 |
| பிரமாண அடிப்படை மானியம் (சீபீஜீ) | 393,000,000 | 391,438,298 | 1,561,702 | 100 |
| நவோதய வடக்கு மாகாண சபை 1000 பாடசாலைகள் | 35,000,000 | 34,785,863 | 214,137 | 99 |
| யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் செயற்திட்டம் | 800,000,000 | 8,170,342 | 791,829,658 | 1 |
| இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் | 690,000,000 | 491,265,559 | 198,734,441 | 71 |

| | | | | |
|---|---|---|---|---|
| சுகாதாரத்துறை அபிவித்தி செயற்திட்டம் (எச்எஸ்டீபீ) | 180,000,000 | 180,000,000 | - | 100 |
| வட மாகாணத்திற்கான உள்ளூர் மட்ட போஷாக்கு தலையீடு செயற்திட்டம் | 60,000,000 | 59,872,589 | 127,411 | 100 |
| | **5,959,777,000** | **4,000,233,672** | **1,959,543,328** | |

(ஆ) மூலதனச் வேலைகளிற்காக மேற்படி மூலங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 5,959.78 மில்லியன் தொகையான நிதிகள் பாதிடப்பட்டது. பாதிடப்பட்ட தொகையில், மாகாண சபையால் குறித்த நோக்கங்களிற்காக ரூபா 1,959.54 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தாமல் ஆளுநர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிலையான வைப்புக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்கில் முறையே ரூபா 137.1 மில்லியன் மற்றும் ரூபா 1,763,531 விடப்பட்டிருந்தது.

(vi) மாகாண அபிவிருத்தி திட்டம்

ரூபா 1,492 மில்லியன் மொத்தத் தொகைக்கான 462 வேலை பிரேரணைகள் புதிய வேலைகள் மற்றும் தொடரும் வேலைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் முன்னேற்ற அறிக்கையின் படி வேலைகளின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ள அட்டவனையில் காட்டப்பட்டுள்ளன.

| | **புதிய வேலைகள்** | **தொடரும் வேலைகள்** | **வேலைப் பிரேரணைகளில் மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|---|
| முற்றாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 361 | 60 | 421 |
| 50% இலும் குறையப் பூர்த்தி செய்யப்பட்டவை | - | - | - |
| 50% இலும் கூட பூர்த்தி செய்யப்பட்டவை | 32 | 02 | 34 |
| ஆரம்பிக்கப்படாதவை | 06 | 01 | 07 |
| **மொத்தம்** | **399** | **63** | **462** |

(vii) அரசாங்க மானியங்கள்

மாகாண சபை அபிவிருத்தி வேலைப் பிரேரணைகளிற்கான ஏற்பாடு மற்றும் அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | மூலம் | ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | குறை பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| i) | நியம அடிப்படை மானியங்கள் (சீபீஜீ) | 393,000,000 | 391,438,298 | 1,561,702 |
| ii) | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்கள் (பிஎஸ்டிஜீ) | 1,035,000,000 | 1,023,777,230 | 11,222,770 |
| | **மொத்தம்** | **1,428,000,000** | **1,415,215,528** | **12,784,472** |

## 5.9 பயனற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

(i) பயனற்ற மற்றும் குறைபயன்பாட்டு பௌதீக வளங்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களின் பௌதீக வளங்கள் பயனற்ற அல்லது குறை பயன்பாட்டுடன் இருந்தன.

| அமைச்சு/ திணைக்களம் | சொத்துக்களின் வகுதி | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | பயன்படுத்தாத அல்லது குறைபயன்பாட்டு காலப்பகுதி |
|---|---|---|---|---|
| விவசாய அமைச்சு | இயந்திரம் | 07 | பெறுமதி தரப்படவில்லை | 05 ஆண்டுகளிற்கு மேல் |
| | ஏனைய சொத்துக்கள் | 07 | பெறுமதி தரப்படவில்லை | 05 ஆண்டுகளிற்கு மேல் |
| கல்வித் திணைக்களம் | கட்டிடம்- மாணவர் விடுதி | 01 | பெறுமதி தரப்படவில்லை | 06 ஆண்டுகளிற்கு மேல் |
| | மோட்டார் | 04 | பெறுமதி | 05 ஆண்டுகளிற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாகனங்கள் | | தரப்படவில்லை | மேல் |
| | மோட்டார் வாகனங்கள் | 05 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| | இயந்திரம் | 09 | பெறுமதி தரப்படவில்லை | 01 ஆண்டிற்கு மேல் |
| | ஏனைய சொத்துக்கள் | 122 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| விவசாய திணைக்களம் | மோட்டார் வாகனங்கள் | 19 | பெறுமதி தரப்படவில்லை | 01 ஆண்டிற்கு மேல் |
| | நீரிறைக்கும் இயந்திரம் | 75 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| | தெளிகருவிகள் | 75 | பெறுமதி தரப்படவில்லை | 02 ஆண்டுகளிற்கு மேல் |
| விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களம் | கட்டிடங்கள்- தொழிலாளர் விடுதிகள் | 02 | பெறுமதி தரப்படவில்லை | 05 ஆண்டுகளிற்கு மேல் |
| காணி நிர்வாக திணைக்களம் | மோட்டார் சைக்கிள் | 02 | பெறுமதி தரப்படவில்லை | 01 ஆண்டிற்கு மேல் |
| | ஏனைய சொத்துக்கள் | 10 | பெறுமதி தரப்படவில்லை | 01 ஆண்டிற்கு மேல் |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் | ஏனைய சொத்துக்கள் | 24 | பெறுமதி தரப்படவில்லை | 01 ஆண்டிற்கு மேல் |
| நீர்ப் பாசனத் திணைக்களம் | ஏனைய சொத்துக்கள் | 08 | பெறுமதி தரப்படவில்லை | 05 ஆண்டிற்கு மேல் |
| | மின்பிறப்பாக்கி | 01 | பெறுமதி தரப்படவில்லை | 01 ஆண்டுகளிற்கு மேல் |

| | | | | |
|---|---|---|---|---|
| கிராமிய அபிவிருத்தி திணைக்களம் | கட்டடிங்கள்- உணவு பாதுகாப்பு நிலையம் மற்றும் அரைக்கும் ஆலை | 05 | 8,600,000 | 01 ஆண்டிற்கு மேல் |
| | | ------------- | | |
| | | 209 | | |
| | | ===== | | |

(ii) கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் பௌதீக வளங்கள் பயனற்ற அல்லது குறை பயன்பாட்டுடன் இருந்தன.

| **அமைச்சு/ திணைக்களம்** | **சொத்துக்களின் வகுதி** | **அலகுகளின் எண்ணிக்கை** | **பெறுமதி ரூபா** | **பயன்படுத்தாத அல்லது குறைபயன்பாட்டு காலப்பகுதி** |
|---|---|---|---|---|
| அரசாங்க விதை உற்பத்தி பண்ணை | நீரிறைக்கும் இயந்திரம் | 07 | பெறுமதி தரப்படவில்லை | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| கால்நடைப் பண்ணை | தொழிலாளர் விடுதி மற்றும் அலுவலக கட்டிடம் | 03 | 2,745,066 | 05 ஆண்டுகளிற்கு மேல் |
| புடவைக் கைத்தொழில் | அலுவலக உபகரணம் மற்றும் இயந்திரம் | 119 | பெறுமதி தரப்படவில்லை | 05 ஆண்டுகளிற்கு மேல் |
| | | ---------------- | | |
| | | 129 | | |
| | | -------------- | | |

(iii) பற்றிக் துணியை உள்ளடக்கிய கைத்தொழில் திணைக்கள புடவைக் கைத்தொழிலின் ரூபா 40,361 ஆன இறுதி இருப்பு குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) நான்கு மாவட்டங்களில் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் 127 வாகனங்கள் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) பிரதி பிரதம செயலாளர் அலுவலம் - நிதியின் 01 மாருதி ஜீப் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்வதற்கு கணிப்பீட்டுச் சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(vi) யாழ்ப்பாணம் யா/ இந்து மகளீர் கல்லூரிக்கு நன்கொடையளிக்கப்பட்ட என்பிஎச்ஓ 8754 ஆம் இலக்க பதிவுடைய முச்சக்கர வண்டியொன்று கடந்த 03 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்றிருந்தது.

(vii) நி.பி 454 மற்றும் 751(1) இலக்கத்தின் பிரகாரம், பல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பொருளிருப்பு பதிவேட்டில் 1,076 பொருளிருப்பு விடயங்கள் பதியப்பட்டிருக்கவில்லை.

| **அமைச்சு/ திணைக்களம்** | **சொத்து வகுதி** | **அலகுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| கல்வி அமைச்சு | வாகனங்கள் | 02 |
| | கணனி தொகுதி | 04 |
| கல்வித் திணைக்களம் | அலுமாரிகள் | 31 |
| நன்னடத்தை திணைக்களம் | தண்ணீர் தொட்டி | 01 |
| | நீரிறைக்கும் இயந்திரம் | 01 |
| | அலுவலக உபகரணம் | 117 |
| விளையாட்டு திணைக்களம் | ஏனைய சொத்துக்கள் | 796 |
| விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதார திணைக்களம் | ஏனைய சொத்துக்கள் | 04 |
| பிரதி பிரதம செயலாளர் அலுவலகம்- நிர்வாகம் | கணனி உபபாகங்கள் | 06 |
| | அலுவலக உபகரணம் | 84 |
| | கணனி உபபாகங்கள் | 09 |
| உள்ளூராட்சி திணைக்களம் | அலுவலக உபகரணங்கள் | 18 |
| கைத்தொழில்கள் திணைக்களம் | குளிரூட்டி | 01 |
| காணி நிர்வாக திணைக்களம் | கோவைகள் அலுமாரி | 02 |
| | | 1,076 |

(viii) களஞ்சியங்களின் வருடாந்த மெய்மையாய்வு

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐந்து வலய கல்வி அலுவலகத்தின் வருடாந்த கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் நி.பி. இல 213 இன் பிரகாரம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சில பாடசாலைகளால் முறையான களஞ்சிய நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சிய பேரேட்டு மீதிகளிற்கும் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட மீதிகளிற்கும் இடையில் கருத்திற்கொள்ளக்கூடிய வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(ix) இலங்கை வடமாகாணத்தில் போசாக்கினை முன்னேற்றுவதற்கான உள்ளூர் மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டம் (ஜேஎஸ்டிபி)

(அ) 2012 இல் ரூபா 6.65 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 100 வயோதிபர் 80 குழந்தைகள் உயரம் மற்றும் நிறையிடல் உபகரணங்கள் உயிரியல் மருத்துவ பொறியியலாளர்களால் உரிய இயந்திரங்கள் திருத்தப்பட்டிருக்காததுடன் அத்தகைய மின்னியல் உபகரணங்களை பயன்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களின் பரீட்சயம் இன்மை போன்ற பல காரணங்கள் காரணமாக 02 ஆண்டுகளிற்கு மேலாக சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் அலுவலகத்தால் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 23 சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்களிற்கு ரூபா 5.3 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 105 மோட்டார் கிரைண்டர் மூன்று கட்ட மீன்சாரம் வழங்கலின்மை காரணமாக குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வு பரிசோதனையில் வெளிப்பட்டது. மேலும், உணவு பதப்படுத்தல் நோக்கத்திற்காக அப் பகுதியில் மூலப்பொருள் கிடைப்பனவு அத்தகைய உபகரணங்களின் கொள்வனவுக்கு முன்னர் செயற்திட்டத்தால் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.10. இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) மா.நி. விதி 70(5) இன் பிரகாரம் 1999 முதல் 2011 வரை காலத்தின் போது ஏற்பட்ட ரூபா 48,961,545 தொகையான நட்டங்கள் தொடர்பில் இரண்டு மாகாண திணைக்களங்களால் இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **அமைச்சு/ திணைக்களம்** | **தொகை** |
|---|---|
| | ரூபா |
| மாகாண விலங்கு வேளாண்மை மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 17,554,713 |
| மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் | 21,761,867 |
| மாகாண சுகாதார திணைக்களம் | 9,644,965 |
| | 48,961,545 |

(ii) மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வாகன இலக்கம் 18- 0845 இற்கான இரண்டு விபத்துக்கள் தொடர்பில் ஏற்பட்ட நட்டங்களை பதிவு செய்யும் நோக்கில் நி.பி 110 மற்றும் மா.நி.பி 76 இன் பிரகாரம் நட்டங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், விபத்துக்களில் அடைந்த ரூபா 451,000 ஆன நட்டங்கள் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் திணைக்களத்தால் நி.பி 102 மற்றும் மா.நி.வி. 68 இன் பிரகாரம் உரிய நட்டங்களின் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(iii) நி.பி 103(1) இன் பிரகாரம், வாகன இல. கேசு 6032 இன் விபத்து காரணமாக ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பில் மாகாண சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 332,220 கூட்டுமொத்த தொகையான முனனைய ஆண்டு நட்டங்கள் மாகாண கல்வி அமைச்சால் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(v) விபத்துக் காரணமாக சேதமடைந்த வாகனங்களை திருத்துவதற்கான கொள்கை அறிக்கையை பெற்றுக்கொள்ளாமல் காணி நிர்வாக திணைக்களத்தால் ரூபா 109,413 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தன அந்த விபரங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(vi) விபத்துக்காரணமான ரூபா 191,917 தொகையான வாகன திருத்தங்கள் ஆளுநர் செயலாளரால் ஒதுக்கீட்டு கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.11. ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

(i) மாகாண வீதிச் செயற்திட்டம்

(அ) செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு வேலைகளின் நோக்கெல்லை வழமைபோல் மாற்றமடைந்திருந்தது ஆதலால் முறையான நில அளவைகள் பொறியியல் மதிப்பீடுகள் தயாரிக்கும் நேரத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், யாழ்ப்பாணத்தில் சிவன் கோவில் வீதி, வேலனை- சுருவில் வீதி மற்றும் மண்டை தீவு வீதி என்பவற்றின் புனரமைப்பு வேலைகளின் அளவீட்டு பட்டியலில் உள்ளடக்கப்பட்ட அளவைகள் 36 சதவீதம் முதல் 250 நாட்கள் வரையான வீச்சிலான கால தாமதங்கள் முரண்பட்டிருந்தது.

(ஆ) 02 பொதிகளின் கீழ் 06 மாகாண வீதிகளின் புனரமைப்பு 2013 ஒக்தோபர் 30 இல் உள்ளவாறு குறைபாட்டுக் காலப்பகுதி பூர்த்தியாக்கப்பட்ட பேதிலும் 72 நாட்கள் முதல் 132 நாட்கள் வீச்செல்லை கொண்ட கால தாமதத்துடன் வட மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் அத்தகைய வீதிகள் கையேற்றப்பட்டிருந்தது.

(இ) தகுந்த காரணம் இல்லாமல் செயற்திட்ட பணிப்பாளரால் 170 கலண்டர் நாட்களிற்கு மேலாக 02 பொதிகளின் கீழ் 06 மாகாண வீதிகளின் புனரமைப்பு வேலைகளிற்காக கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் கடனளிக்கும் முகவரிடமிருந்து முன் ஒத்துழைப்பு பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (என்ஆர்சீபி)

(அ) செயற்திட்டத்தின் மூல நோக்கெல்லையின் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்பணி அறிக்கைகளின் பிரகாரம், வீதி ஓரங்கள் அகலமாக்குவதற்கு வழங்கப்பட்ட சிபாரிசுகள் மற்றும் வல்லை- அராலி வீதியின் பல இடங்களில் தடுப்புச் சுவர்கள் நிர்மாணித்தல் செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதிப் பராமரிப்பு வேலைகள் செயலாற்றலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் சேவை மட்டங்கள் செயலாற்றல் குறிகாட்டிகளின் பிரகாரம் கொடுப்பனவுகளை

செய்வதற்கு மாதாந்த செயலாற்றலை மதிப்பிடுதல் என்பவற்றினை நிர்ணயிப்பதற்கும் பிரமாணம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தகாரர்கள் செயலாற்றல் அடிப்படை பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக முறைமை கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செலாற்றல் அடிப்படை பராமரிப்பு வேலைகளிற்காக புறம்பான ஒப்பந்த உடன்படிக்கைகள் ஒப்பந்தகாரர்களுடன் கைசாத்திடப்பட்டிருக்காததுடன் இதன் விளைவாக, தீர்ப்பனவு கோரிக்கைகளில் தகராறு எழுகின்றதன் சாத்தியத்தன்மை கணக்காய்வில் மதிப்பட முடியாதிருந்தது.

(iii) ரூபா 3,181,443 கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட மாங்குளம்-முல்லைத்தீவு வீதி புனரமைப்பு வேலைகளின் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி 2014 யூலையில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உறுதிப்படுத்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட வீதியின் 18 + 446 கிலோமீற்றரிற்கும் 20 + 720 கிலோமீற்றரிற்கும் இடையில் 11 இடங்களில் குறைபாடுகளை திருத்துதல் 2014 திசெம்பர் 31 வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் மேலதிக நிதியளிப்பு ஒழுங்கமைப்பின் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆலோசனை சேவை உடன்படிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து ஏதாவது நிதி அல்லது வேறு நலன்கைளைப் பெறுவதற்கு ஆலோசனை உத்தியோகத்தர் அனுமதிக்கப்பட்டிருக்காத போதிலும தொழில்நுட்ப ஆலோசனை உத்தியோகத்தரின் ரூபா 86,810 தொகையான மேலதிக நேர கிரயம் ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ii) ஒப்பந்தகாரரின் நிதி மற்றும் பௌதீக வளங்கள் உடன்பட்ட காலத்தின் போது ஒப்பந்தங்களின் பூர்த்தியாக்கலில் ஆபத்து ஏற்படுகின்ற பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்த நடவடிக்கையின் நோக்கத்திற்காக வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. தரக் கட்டுப்பாட்டு முகாமையாளர்

மற்றும் தொழிலாளர்கள் உள்ளடங்கலான மனித வளங்கள் யாழ்ப்பாணம்- பண்ணை – ஊர்காவற்துறை வீதி புனரமைப்பு வேலைகளிற்காக ஒப்பந்தகாரரால் போதியளவானோர் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பரிமாணம் 3- தொழில்நுட்ப குறிப்புரைகளின் 103.4 ஆம் பந்தியின் பிரகாரம், ஒப்பந்தகாரரால் பாதுகாப்பான சீரான மற்றும் திருப்திகரமான நெரிசல் கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்புகளுடன் இணங்கியிருக்க வேண்டியதுடன் அது வேலை நிறைவேற்றலின் போது தொடர்ந்திருக்க வேண்டும். தடைகளை சுற்றி ஆழமான அகழ்தல் தளங்கள் இன்மை காரணமாக மதவாச்சி- கெப்பிட்டிக்கொல்லாவ வீதி, வீதி நெருக்கமாக உள்ள இடங்களில் வீதி சமிஞ்சைகள் போன்றவற்றின் நிர்மாணத்தின் சேவைப் பாதுகாப்பு மீறல்கள் முன்னேற்ற அறிக்கை மற்றும் வேலைத்தள கூட்ட குறிப்புகள் என்பனவற்றை காட்டுகிறது.

(iv) கெப்பிட்டிகொல்லாவ – பதவியா வீதியின் குறைபாட்டு இடங்களிற்காக சான்றுபடுத்தாத உற்பத்தி குறிப்புகள் வழங்கப்பட்டிருந்தது அல்லது வேண்டப்பட்ட திருத்த நடவடிக்கைகளிற்கான படங்கள் பொறியியலாளருடைய அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டோ அல்லது ஒப்பந்தகாரரால் வீதியின் அஸ்பற் தவறிய பிரிவுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) ஒவ்வொரு மாதங்களிலும் விசேட ஒப்பந்த நிபந்தனையின் 4.18 ஆம் உட்பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஒப்பந்தகாரராலும் சுற்றாடல் கண்காணிப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் பல சந்தர்ப்பங்களில் ஒப்பந்தகாரால் சுற்றாடல் இணக்க நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. 2015 மே இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையில் இடிந்த மற்றும் அகற்றப்பட்ட பொருட்கள் மதவாச்சி – கெப்பிட்டிக்கெல்வாவ வீதிக்கு இடையில் அகற்றப்பட்டிருக்காததுடன் எத்தக்கடாவில் நொருக்குதல் பொறி மற்றும் அஸ்பாற் பொறியின் தூசு புகை கட்டுப்படுத்துவதற்கு அந்த அளவீடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என வெளிப்பட்டது.

(vi) செயற்திட்டமானது மதவாச்சி – மன்னார் வீதி மற்றும் யாழ்ப்பாணம்- பண்ணை- ஊற்காவற்துறை வீதி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளிற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் குழாய்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதல், அகழ்தல், மீளநிரப்புதல் மற்றும் குழாய் பொருத்துதல் நடவடிக்கைகள் என்பவற்றிற்கு கையேற்கப்பட்டிருந்ததுடன் முறையே ரூபா 15.9 மில்லியன் மற்றும் ரூபா 16.8 மில்லியன் கிரயத்தில் ஏற்பட்டது. எவ்வாறாயினும், ரூபா 3.8 மில்லியன் பெறுமதியான குழாய்கள் மற்றும் பொருத்திகள் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் மரதன்கடவெலவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படாதது இருந்தது.

(vi) செயற்திட்டமானது யாழ்ப்பாணம்- பண்ணை- ஊற்காவற்துறை வீதியின் புனரமைப்பிற்காக காணி சுவீகரிப்புகளில் இழப்பீட்டு கொடுப்பனவுகளிற்காக மீளாய்வாண்டின் இறுதியில் ஊற்காவற்துறை பிரதேச செயலகத்திற்கு ரூபா 8.19 மில்லியன் தொகையை விடுவித்திருந்தது. எவ்வாறாயினும், காணி உரிமையாளர்களின் பட்டியல், அவர்களிடமிருந்ருந்து பெறப்பட்ட பெற்றுக்கோடல்கள், போன்ற கொடுப்பனவுகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 1.32 மில்லியன் செலவழிக்காத தொகை மீளாய்வாண்டின் இறுதியில் பிரதேச செயலகத்தால் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 76 காணித்துண்டுகளின் உரிமையாளர்களை இனங்காணாமல் பிரதேச செயலகத்திற்கு ரூபா 2.79 மில்லியன் தொகையை விடுவித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 5.12 தாமதப்பட்ட செயற்திட்டங்கள்

(i) 2 மாவட்டங்களில் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது ரூபா 153,456,529 பெறுமதிக்கு 108 செயற்திட்டங்களின் அமுலாக்கலில் கருத்திற்கொள்ளவேண்டிய தாமதங்கள் இருந்தது.

(ii) மாகாண கல்வித் திணைக்களத்தால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 162,039,710 பெறுமதிக்கு ரூபா 18 செயற்திட்டங்களின் அமுலாக்கலில் கருத்திற்கொள்ளவேண்டிய தாமதங்கள் இருந்தது.

(iii) வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (நெல்சிப்) பூர்த்தியாக்கலில் கருத்திற்கொள்ளவேண்டிய காலதாமதம்

வடக்கு மாகாணத்தில் சிவில் வேலைகளின் பூர்த்தியாக்கலில் 02 முதல் 08 மாதங்கள் வரையான வீச்சில் காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு மாகாணத்தின் பிரதேச சபையால் ஒப்பந்தகாரர்களிமிருந்து தாமதக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) ஓச்சாட் பண்ணையில் முதல் மரநடுகை நடவடிக்கைகள் தொடங்குவதில் தாமதம்

மீளாய்வாண்டின் போது ஓச்சாட் பண்ணை மரநடுகைகளை அமுலாக்குவதற்கு தீர்மானித்திருந்ததுடன் மண் கொண்டுதல் வேலைகள் பூர்த்தியாக்காமை காரணமாக 2015 ஆகஸ்ட் 31 வரையும் வினைத்திறனாக பயன்படுத்தப்படாத ரூபா 4,490,268 தொகை நிதி விவசாய அமைச்சால் கயான செலுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **கொடுப்பனவுத் தன்மை** | **தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| தண்ணீர் தொட்டி மற்றும் குழாய் கிணறின் நிர்மாணம் | 1,047,200 |
| வலை வீட்டின் நிர்மாணம் | 315,000 |
| மரங்களின் கொள்வனவு | 76,270 |
| விவசாய உபகரணங்கள் (நீரிறைக்கும் இயந்திரம், இருசக்கர உழவு இயந்திரம், உயர் அழுத்தி பிரதான வரிசை, தாழ் அழுத்தி பிரதான வரிசை போன்றன) | 2,591,113 |
| மின்சார இணைப்பு (தற்போது வரை வழங்கப்பட்டிராத புதிய இணைப்பு) | 460,685 |
| | 4,490,268 |

## 5.13. செயற்திட்டங்களின் அமுலாக்கலிலுள்ள தாமதங்கள்

(i) நிதிகள் இன்மையால் யாழ்ப்பாணத்திலுள்ள 10 உள்ளுராட்சி அதிகாரசபைகளால் ரூபா 109,518,500 பெறுமதிக்கு 68 செயற்திட்ட வேலைகள் முழுமையாக கைவிடப்பட்டிருந்தன.

(ii) கல்வித் திணைக்களத்தால் நிதியாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 20,460,000 பெறுமதிக்கு பின்வரும் 18 செயற்திட்ட வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது.

| நிதியாண்டு | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு | பெறப்பட்ட கட்டுநிதி வைப்புகள் |
|---|---|---|---|
| 2013 | 03 | 7,810,000 | 7,810,000 |
| 2014 | 15 | 12,650,000 | 12,650,000 |
| | 18 | 20,460,000 | 20,460,000 |

## 5.14. வட மாகாணத்தில் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள் மீதான அவதானிப்புகள்

(i) மாகாண வீதிச் செயற்திட்டத்தின் (பிஆர்பி) பௌதீக முன்னேற்றம்

கிடைக்கபபெற்ற தகவல்களின் பிரகாரம், வடக்கு மாகாணத்தில் அண்ணளவாக 100 கிலோமீற்றரை புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 56.17 கிலோமீற்றர் நீளமான 12 மாகாண வீதிகளை புனரமைப்பதற்கு செயற்திட்டத்தால் 04 ஒப்பந்த பொதிகள் வழங்கப்பட்டிருந்தது. புனரமைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 12 மாகாண வீதிகளில், 02 பொதிகளின் கீழான 23.07 கிலோமீற்றர் நீளமான 06 வீதிகளின் புனரமைப்பு வேலைகளில் 2013 ஒக்தோபர் 30 உள்ளவாறு 150 நாட்கள் முதல் 174 நாட்கள் வரையான வீச்சிலான காலதாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. 26.42 கிலோ மீற்றர் நீளமான ஏனைய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2014 திசெம்பர் 31 இலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டத்தின் (என்ஆர்சீபி) பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் வேலைகளின் மூல நோக்கெல்லை மற்றும் மேலதிக நிதியளிப்பு ஒழுங்குகள் என்பவற்றின் கீழ் செய்யப்பட வேண்டிய புனரமைப்பு வேலைகளான 02 கூறுகளுடன் கொண்டிருந்தது. வேலைகளின் மூல

நோக்கெல்லைக்கான செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 170 கிலோமீற்றர நீளமான 10 தேசிய வீதிகளை பூர்த்தியாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அத்தகைய வீதிகளின் புனரமைப்பிற்காக 10 ஒப்பந்த பொதிகளை வழங்கியிருந்ததுடன் சகல புனரமைப்பு வேலைகளும் 2013 திசெம்பர் 12 இல் உள்ளவாறு பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தங்களின் கட்டம் II இன் கீழ், ஒப்பந்தகாரர்கள் செயலாற்றல் அடிப்படை வீதிப்பராமரிப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் மேலும் 03 ஆண்டுகளிற்காக அத்தகைய வீதிகளின் வீதிப்பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கும் பொறுப்புக்குட்பட்டிருந்தார்.

மேலும், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் ஏனைய 10 வீதிகளை புனரமைப்பிற்கான ஒப்பந்தங்கள் மேலதிக நிதியளிப்பு ஒழுங்குகளின் கீழ் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 30 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. அதில், 2013 திசெம்பரில் தொடங்கப்பட்ட யாழ்ப்பாணம்- பண்ணை- ஊர்காவற்துறை வீதிகளின் புனரமப்பு வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 30.7 சதவீத மெதுவான பௌதீக முன்னேற்றத்தைக் காட்டியது.

(iii) வட மாகாணத்திற்கான உள்நாட்டு மட்ட போசாக்கை முன்னேற்றுவதற்கான தலையீட்டு செயற்திட்டம் (ஜேஎஸ்டிஎவ்)

(அ) பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது வட மாகாணத்தில் இடம்பெயர்ந்த சனத்தொகையின் ஊட்டச்சத்தின்மையை குறைக்கும் நோக்கத்தை அடைவதற்கு 9,000 கர்ப்பிணி பெண்கள், 5,000 பாலூட்டும் பெண்கள் மற்றும் 5 வயதிற்கு குறைந்த 11,000 சிறுவர்கள் என்போரின் இலக்கிற்காக போசாக்கு உணவு (ஜீவபோசா) வழங்குவதில் ஏடுபட்டிருந்ததுடன் 6,084 கர்ப்பிணி பெண்கள், 5,404 பாலூட்டும் பெண்கள் மற்றும் 11,478 சிசுக்கள் மற்றும் சிறுவர்கள் செயற்திட்டத்தின் கீழ் சேவைபெற்றிருந்தனர்.

(ஆ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது 2 வயதிற்கு குறைந்த சிறுவர்களிற்காக மாத்திரம் உணவு வழங்குவதற்கு செயற்திட்டத்தின் இறுதிக் காலப்பகுதியில் தீர்மானித்திருந்ததுடன் இதன் விளைவாக வயது 2- 5 ஆண்டுகள் வீச்சிலான சிறுவர்களுக்கு யெற்திட்டத்தால் சேவை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்கள், கிரைன்டர் மற்றும் அச்சிடல் பொருட்கள் போன்றனவற்றை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக ரூபா 16.08 மில்லியன் தொகை செலவழித்திருந்ததுடன் அந்த பொருட்கள் நிதியளிப்பு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை.

(iv) யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (இரணைமடு கூறு)

(அ) பௌதீக முன்னேற்றம்

இரணைமடு புனரமைப்பிற்காக செயற்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிலைபேறான தண்ணீர் முன்னேற்றத்தை அடைவதற்கு தளும்புவாயில், சுற்றளவு, கதவுகள், மேற்பரப்பு சக்தி விரயமாக்கல் கட்டமமைப்பு என்பன உள்ளடங்கலான தலைமை வேலைகளாக உள்ளதுடன் செயற்திட்டத்தின் 3 1/2 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் காணி தயார்படுத்தல் தொங்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், செயற்திட்ட பணிப்பாளர் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தண்ணீர் பகிர்வதில் அப்பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து வலுவான எதிர்ப்பு காரணமாக தொடங்கியிருக்கவில்லை என குறிப்பிட்டிருந்தார். கணக்காய்வின் நோக்கில், செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளில் விவசாயிகளுடன் சுமுகமான உறவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் செயற்திட்டத்தின் கிரயத்தினையும் காலத்தினையும் சேமிப்பதன் மூலம் எதிர்ப்பை குறைத்திருக்க முடியும்.

(ஆ) நீர்ப்பாசன திணைக்களத்துடன் தொடர்புபட்ட ரூபா 135,977 கூட்டு மொத்த தொகையான தொலைபேசி, மின்சாரம் மற்றும் பாடநெறி கட்டணங்களில் ஏற்பட்ட செலவினம் செயற்திட்டத்தின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(v) வடக்கில் மீளக்குடியேற்றப்பட்ட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வாதாரங்களை மீளமைப்பதற்கான மோதல்களிற்குப் பிந்திய அவசர உதவிச் செயற்திட்டம்

(அ) பௌதீக செயலாற்றல்

(i) பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரால் அமர்த்தப்பட்ட செயற்திட்ட ஒருங்கிணைப்பு குழு (பிசீசீ) செயற்திட்ட நிர்வாக விஞ்ஞாபனத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்தம் நடைபெற வேண்டும். எவ்வாறாயினும் செயற்திட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது வினைத்திறனான செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு இயலக்கூடியவாறு செயற்திட்ட காலத்தின் போது தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அடையப்பட வேண்டிய இலக்குகளுடன் பிரதான பதவியியிணரின் பொறுப்புக்களை இனங்காணவேண்டிய தேவையிருந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் செயற்திட்ட காலத்தின் போது மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பாதீட்டு ஒதுக்கீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஒட்டுமொத்தமாக செயற்திட்டத்தின் முன்னேற்றம் சரியான அளவீடுகளை எடுப்பதற்கும் மற்றும் நோக்கங்களை அடைவதற்கான அவசியமான மாற்றங்களை செய்வதற்கும் முறைப்படி மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

(iii) கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2014 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு வயல் நீர்ப்பாசன வாய்க்கால்களின் புனரமைப்பின் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு இருந்தன.

| மாவட்டம் | வயல் நீர்பாசன வாய்க்கால்கல் (எவ்ஜசீஎஸ்) | | | |
|---|---|---|---|---|
| | இலக்கு | பூர்த்தி செய்யப்பட்டது | நடைபெறும் வேலை | மொத்தம் |
| | கிமீ | கிமீ | கிமீ | கிமீ |
| யாழ்ப்பாணம் | 40 | 17.41 | - | 17.41 |
| கிளிநொச்சி | 40 | - | 22.5 | 22.5 |
| முல்லைத்தீவு | 40 | - | 7.25 | 7.25 |
| மன்னார் | 40 | 18.90 | - | 18.90 |
| வவுனியா | 40 | - | 23.58 | 23.58 |
| மொத்தம் | 200 | 36.31 | 53.33 | 89.64 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட காலத்தின் போது புனரமைக்கப்பட வேண்டுமென இலக்கிடப்பட்ட 200 கிலோ மீற்றர்களில், 36.31 கிலோமீற்றர் வயல் நீர் பாசன வாய்க்கால்கள் மாத்திரம் செயற்திட்டத்தின் காலத்திற்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(iv) செயற்திட்ட காலத்தின் போது கிராம நுழைவு வீதிகளின் 100 கிலோ மீற்றர்களை முன்னேற்றுவதற்கு செயற்திட்டம் இலக்கிடப்பட்டிருந்ததுடன் அதில் 28.98 கிலோ மீற்றர் கிராம நுழைவு வீதிகளின் புனரமைப்பு வேலைகள் மாத்திரம் 2014 பெப்ரவரி 28 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(v) செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், குறைந்தது 2,000 உள்ளூரில் இடம்பெயர்ந்த நபர்களிற்காக சுய வேலை வாய்ப்பிற்கான தொழில்திறன் அபிவிருத்தி பயிற்சியை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அதில் 1,758 உள்ளூரில் இடம்பெயர்ந்த நபர்களிற்கான பயிற்சி செயலமர்வுகள் மாத்திரம் 2014 பெப்ரவரி 28 இல் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார மீட்டெடுப்பு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 29,377,755 பெறுமதியான கருவிகள் மற்றும்

உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்து. எவ்வாறாயினும், அத்தகைய சொத்துக்களின் கொள்வனவிற்கான கேள்விகள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களில் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், 05 மாவட்ட அலுவலகங்களின் நடைமுறையல்லாச் சொத்துக்களில் வருடாந்த கணிப்பீட்டுச் சபை நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அத்தகையவாறு ரூபா 5,100,789 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களிற்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 29,377,755 பெறுமதியான கருவிகள் என்பவற்றின் உள்ளதன்மை மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அறிவுறுத்தப்பட்டதிற்கிணங்க செயற்திட்ட காலத்தின் இறுதியில் வேண்டப்பட்டவாறு காசு மற்றும் வங்கி மீதிகள் பொது திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் ரூபா 1,020,436 மொத்தமான காசு மற்றும் வங்கி மீதிகள் 2014 பெப்ரவரி 28 இல் பொது திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 1,137,768 கிரயத்தில் 10 மேசைக் கணனிகள் 2014 பெப்ரவரி 28 இல் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 வரையும் முன்னாள் பொருளாதார அமைச்சின் வளவில் விடப்பட்டிருந்தது.

(ஊ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 பெப்ரவரி 28 இல் மூடப்பட்டிருந்த போதிலும் உரிய முகவர்களிற்கு செயற்திட்டத்தின் சொத்துக்களை கையளிப்பதற்கும் செயற்திட்டத்தின் கணக்கொழிப்பு கணக்குகளை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 343,035 தொகையான மேலதிக கொடுப்பனவு நிதிக் கூற்றுக்களில் தொங்கல் கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(vi) வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டம் (நெல்சிப்)

உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக விடுவிக்கப்பட்ட ரூபா 2,240,764,419 தொகையான

மானியங்கள் மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி அதிகாரசபைகளால் பயன்படுத்தப்படாமல் நிதிக்கூற்றுக்களில் செலவினமாக வெளிப்படுத்தப்பட்டது.

## 5.15 ஆளணி நிர்வாகம்

வட மாகாண சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஆளணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) மாகாண சபையின் பாடசாலைகள் தவிர்ந்த அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்

| பதவியணியினர் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | வெற்றிடங்கள் /(மேலதிகம்) |
|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| சிரேஷ்ட நிலை | 1,675 | 1,122 | 553 |
| மூன்றாம் நிலை | 2,628 | 1,762 | 866 |
| இரண்டாம்நிலை | 3,979 | 3,003 | 976 |
| ஆரம்ப நிலை | 5,904 | 5,609 | 295 |
| | 14,186 | 11,496 | 2,690 |

மாகாண சபையானது மீளாய்வாண்டு இறுதியளவில் 2,690 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) பாடசாலை பதவியணி

| மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட பதவியணி | | உள்ளபடியான பதவியணி | | வெற்றிடங்கள் | | மிகைகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அதிபர் | ஆசிரியர்கள் | அதிபர் | ஆசிரியர்கள் | அதிபர் | ஆசிரியர்கள் | அதிபர் | ஆசிரியர்கள் |
| யாழ்ப்பாணம் | 498 | 6,701 | 334 | 7,003 | 164 | - | - | 302 |
| கிளிநொச்சி | 122 | 1,735 | 75 | 1,630 | 47 | 105 | - | - |
| மன்னார் | 143 | 1,422 | 76 | 1,544 | 67 | - | - | 122 |
| வவுனியா | 235 | 2,030 | 169 | 1,998 | 66 | 72 | - | 40 |
| முல்லைதீவு | 130 | 1,561 | 81 | 1,472 | 49 | 89 | - | - |
| **மொத்தம்** | **1,128** | **13,449** | **735** | **13,647** | **393** | **266** | **-** | **464** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தோட்டத் தொழிலாளிகள், தொழிலாளிகள், கணித வள நிலைய உத்தியோகத்தர்கள், சேவையிலுள்ள ஆலோசனையாளர் ஆசிரியர் நிலைய முகாமையாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போன்றவற்றிற்கான பதவியணியை அனுமதித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்த பதவியணியின் 36 எண்ணிக்கையான வகைகள் பதவியணியின் அங்கீகாரமில்லாமல் ஈடுபடுத்துப்பட்டுள்ளது.

(ஆ) செயலாற்றல் அடிப்படையில் அதிபர்களாக 327 ஆசிரியர்கள் வேலைசெய்கின்றனர். இது தொடர்பில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் மாவட்டங்களில் 464 ஆசிரியர் மிகையை குறைக்கும் நோக்கத்திற்காக

கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 266 ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 5 மாவட்டங்களில் அதிபர்களின் 393 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சுகாதார துறை பதவியணி

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் (பிடிஎச்எஸ்) மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் (ஆர்டிஎச்எஸ்) சுகாதார உத்தியோகத்தர்களின் மிகை மற்றும் பற்றாக்குறை நிலவியது. எவ்வாறாயினும், மாகாணத்திற்குள் பற்றாக்குறை பதவியணியினருக்கு எதிராக மிகையான பதவியணியினரை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மாவட்டம் | மருத்துவ உத்தியோகத்தர்கள் | | | பற் சிகிச்சை | | | தாதிகள் சேவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அனுமதிக் கப்பட்டது | உள்ள படியானது | வெற்றிடம் | அனுமதி க்கப் பட்டது | உள்ள படியானது | வெற்றிடம் | அனுமதி க்கப் பட்டது | உள்ளப டியானது | வெற்றிடம் |
| யாழ்ப்பாணம் | 220 | 131 | 89 | 37 | 26 | 11 | 289 | 166 | 123 |
| கிளிநொச்சி | 107 | 82 | 25 | 13 | 07 | 06 | 144 | 65 | 79 |
| முல்லைத்தீவு | 123 | 61 | 62 | 11 | 06 | 05 | 132 | 56 | 76 |
| வவுனியா | 149 | 107 | 42 | 14 | 15 | (01) | 262 | 206 | 56 |
| மன்னார் | 124 | 74 | 50 | 17 | 14 | 03 | 151 | 107 | 44 |
| | **723** | **455** | **268** | **92** | **68** | **24** | **978** | **600** | **378** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒட்டு மொத்த சுகாதார பதவியணிக்காக 7,275 எண்ணிக்கைகள் வேண்டுகை செய்யப்பட்டது. அதேநேரம், முகாமைத்துவ சேவைகள்

திணைக்களம் 6,325 எண்ணிக்கைகளிற்கு மாத்திரம் அனுமதி வழங்கியிருந்தது.

(ஆ) ஆலோசனையாளர்களிற்காக அனுமதிக்கப்பட்ட 119 எண்ணிக்கையில், தற்போது 43 ஆலோசனையாளர் மாத்திரம் மாகாணத்தில் வேலை செய்கின்றனர். யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் பல வைத்தியசாலைகளில் வெற்றிடங்கள் உள்ளன.

(இ) மருத்துவ உத்தியோகத்தர்களிற்காக அனுமதிக்கப்பட்ட 723 எண்ணிக்கையில், தற்போது 455 மருத்துவ உத்தியோகத்தர்கள் வேலைசெய்கின்றதுடன் இதன்விளைவாக பல புறநகர் வைத்தியசாலைகள் எம்பீஎஸ் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரும் இல்லாமல் செயற்படுகின்றன.

(ஈ) பிரதான வைத்தியசாலைகளில் தாதியியல் உத்தியோகத்தர்களில் குறைவுகள் உள்ளது. 978 அனுமதிக்கப்பட்ட பதவியணியில், மாகாணத்தில் 600 தாதியியல் உத்தியோகத்தர்கள் மாத்திரம் வேலைசெய்கின்றனர்.

(உ) பற் சிகிச்சை வைத்தியர்களிற்கான அனுமதிக்கப்பட்ட பதவியணியின் 92 எண்ணிக்கையில், தற்போது 68 மாத்திரம் வேலைசெய்கின்றதுடன் இன்றுவரை ஐந்து மாவட்டங்களில் 24 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வட மாகாணத்தில் 287 சமநிலை மருத்துவ வகுதி பதவியணியினர் பற்றாக்குறையாக உள்ளனர்.

(iv) ஒழுங்கற்ற நியமனங்கள் மற்றும் வேதனங்கள்

மாகாண சபைக்கான அதிகமான ஆட்சேர்ப்புகள் எந்தவொரு முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையைப் பின்பற்றாது எழுந்தமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நாடுபூராவுமான சேவைகள் அல்லது மாகாண சேவைகளின் ஏற்றுக்கொள்ளக்கூடிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நோக்கெல்லைக்குள் செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 மே 11 ஆம் திகதிய 09/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கு முரணாக மீள நியமனம் பெற்ற ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களிற்கு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில், ரூபா 3.3 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த விடயம் 2011 இற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,360,959 ஆன மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது சட்ட ஆலோசகர் உட்பட ஒன்பது ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களிற்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பொது விளம்பரங்களைப் வெளியிடாமல் இளைப்பாறிய உத்தியோகத்தர்களிற்கு மீள் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) மாகாணத்தில் அதிக அனுபவத்துடன் கூடிய சிரேஷ்ட கணக்காளர்கள் இருந்த போதிலும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அதிகமானவை பிரதம கணக்காளர்களாக குறைந்த அனுபவமுடைய கணக்காளர்களை நியமித்திருந்தன. இதன் விளைவாக அந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் சிறந்த நிதிக்கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்கு என்பவற்றைப் பிரயோகிக்க முடியாதிருந்தது.

(உ) அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அதிகமானவை முகாமைத்துவ சேவை வகுப்பு 1 இன் உத்தியோகத்தர்களிற்குப் பதிலாக முகாமைத்துவ சேவை வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை பிரதம முகாமைத்துவ எழுதுனராக நியமித்திருந்தனர்.

(ஊ) முகாமைத்துவ உதவியாளர்களில் அதிகமானோர் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களின் பணிகளை மேற்கொள்வதற்குமான பணிகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்தனர்

(எ) இலங்கை கணக்காளர் சேவை தீவடங்கலிற்குமான சேவையாக இருந்த போதிலும் 2007 பெப்ரவரி 11 ஆம் திகதிய எஸ்சீஎவ்ஆர் 320/2003 ஆம் இலக்க வழக்குத் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைக்

கருத்திற்கொள்ளாது பல உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டில் கணக்காளர்களின் பணிகளை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஏ) கல்வி அமைச்சால் செய்யப்பட்ட முறையற்ற நியமனம்

வட மாகாணத்தின் கல்வி அமைச்சின் செயலாளர் முறையற்ற நியமனங்கள் மற்றும் மறு நியமனங்களை செய்திருந்ததுடன் மேற் குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் ரூபா 428,482 ஆன சம்பளக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(v) ஆசிரியர்களினை ஈடுபடுத்தல்

பாடசாலைகளில் குறித்த பாடங்களிற்கான நிலவிய வெற்றிடங்களின் பிரகாரம் ஆசிரியர்கள் முறைப்படி ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, சில பாடசாலைகளின் சம்பந்தப்பட்ட பாடங்களிற்காக ஆசிரியர்களின் பற்றாக்குறைவு அவதானிக்கப்பட்ட அதேநேரம் சில பாடசாலைகளில் அதே பாடங்களிற்காக ஆசிரியர் மிகைகள் அவதானிக்கப்பட்டன. ஆசிரியர்களின் முறையற்ற ஈடுபடுத்தல் காரணமாக, க.பொ சா/த மற்றும் உ/த பரீட்சைகளில் திருப்திகரமான செயலாற்றலை அடைந்திருக்கவில்லை. பாடங்களிற்கான வெற்றிடங்களை கருத்திற்கொண்டு ஆசிரியர்களை ஈடுபடுத்தியிருப்பின் சிறந்த செயலாற்றலை அடைந்திருக்க முடியும்.

**5.16 வாகனங்களின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாகாண சபையிற்கு இணைக்கப்பட்ட 1,094 எண்ணிக்கையான வாகனங்களில், சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மாகாண நிதி விதி – 433 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது உரிய திகதிகளில் அவர்களுடைய உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்பில் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புகள் என்பவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், வட மாகாண சபைக்கு இணைக்கப்பட்ட 1,094 எண்ணிக்கைகளில் 30 எண்ணிக்கையான வாகனங்களின் பதிவுசெய்யப்பட்ட

உரிமையாளர்களின் பெயர்கள் அறியப்பட்டிருக்காததுடன் 511 வாகனங்கள் வட மாகாண சபையின் பெயரில் இருக்கவில்லை.

(iii) மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் திருத்தங்களிற்காக ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள் வீச்செல்லை கொண்ட காலமாக பல வாகனங்கள் கராஜிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(iv) மாகாண நிதி விதி 433 இன் பிரகாரம் சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் நாளாந்த ஓட்ட அட்டவணை முறைப்படி பேணப்பட்டிருக்காததுடன் நாளாந்த ஓட்ட அட்டவணையில் உத்தியோகபூர்வ நோக்க பயணங்கள் பதியப்பட்டிருக்கவில்லை.

(v) பல்வேறு தரப்பினரால் நன்கொடையளிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவாக, 02 மாவட்டங்களில் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் 92 வாகனகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

| **மாவட்டம்** | **வாகனங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| யாழ்ப்பாணம் | 87 |
| முல்லைத்தீவு | 05 |
| | 92 |

(vi) வாகனங்களின் திருத்தம் - ரூபா 5,778,011

சனாதிபதி செயலகத்தின் 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் படி, ஆளுநர் செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருக்க வேண்டிய வாகனங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை 07 ஆகும். எனினும், மீளாய்வாண்டின் போது 20 வாகனங்களிற்கு மேல் ஆளுநர் செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தன. மேலும், மீளாய்வாண்டின் போது 11 வாகனங்களிற்கு ரூபா 5,778,011 கிரயத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன என்று அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் வாகனங்களின் திருத்தங்களிற்கு கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 செப்தெம்பர் 06 ஆம் திகதிய (தொடர்பு இல. 9.3) கொள்வனவு வழிகாட்டிகளின் பிரகாரம் ரூபா 200,000 மேற்பட்ட செலவினம் செய்வதற்கான அனுமதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது நிர்வாக அமைச்சின் 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் திருத்தங்களிற்கான கொடுப்பனவிற்கு முன்னர் இயந்திரவியல் பொறியியலாளரிடமிருந்தான சான்றுபடுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மா.நி.வி 107 இற்கு முரணாக 03 சந்தர்ப்பங்களில் விலைப்பட்டியல் பெற்றுக்கொள்ளாது வாகன திருத்தங்களிற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) 11 புதிய வாகனங்களிற்கு ரூபா 88,954 தொடக்கம் ரூபா 1,997,696 வரை வீச்செல்லை கொண்ட கிரயத்தில் பாரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(vii) பயணத்தின் நோக்கம் ஓட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் பல அமைச்சுக்கள் மற்றுத் திணைக்களங்கள் தொடர்பான வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தர் ஓட்ட அட்டவணையில் கையொப்பமிட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ள.

| **அமைச்சு/ திணைக்களங்கள்** | **வாகன இலக்கம்** | **பயணத்தின் நோக்கங்கள் வழங்கப்பட்டிராதவை** | **வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தர் கையொப்பமிட்டிராதவை** |
|---|---|---|---|
| | | கி.மீ | கி.மீ |
| கடற்றொழில் அமைச்சு | என்ஏ 5505 | | 864 |
| | எனஏ 7589 | | 84 |
| | எச்எல் 8553 | 30,700 | |
| | என்ஏ 4760 | | 258 |
| | என்ஏ 7588 | | 69 |

| | | | |
|---|---|---|---|
| மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு | என்பிபிஎவ் 2048 | 23,181 | |
| கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | ஈபிஜேஎன் 9283 | 16,096 | 72 |
| | என்பிபிசீ 1494 | 34,704 | 34 |
| ஆளுநர் செயலகம் | ஜேஓ 8604 | 33,450 | - |
| சுகாதார அமைச்சு | என்ஏ 4723 | 20,407 | 448 |
| | எச்எல் 8546 | 29,274 | |
| | டபிள்யூஐ 5387 | 9,322 | |
| சுகாதார சேவைகள் திணைக்களம் | டபிள்யூபிபிபீ 7081 | 28,194 | 956 |
| | என்பிஜேடபிள்யூ 1153 | 45,428 | 1,587 |
| | ஈபிகியூஎன் 0251 | 2,146 | |
| | என்பிஎல்டபிள்யூ 0561 | 18,893 | |
| | ஈபிஎன்ஏ 6803 | 34,796 | 38 |
| சுதேசிய வைத்திய திணைக்களம் | ஈபிபிபி 0590 | 24,217 | |
| | ஈபிபிபீ 7418 | 40,604 | |
| கைத்தொழில் திணைக்களம் | என்பிபிஎவ் 2048 | 6,567 | |
| உள்ளூராட்சி அமைச்சு | என்ஏ 7531 | 30,585 | 45 |
| வீதி அபிவிருத்தி திணைக்களம் | ஈபிஎச்எம் 2817 | 21,129 | |
| உள்ளக கணக்காய்வு பிரிவு | 227- 5953 | 9,822 | |
| கட்டிட திணைக்களம் | 32- 7380 | 12,984 | |
| | | 472,499 | 4,445 |

**5.17 வங்கிக் கணக்கிணக்கம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மா.நி.வி 237 இன் பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் ஆறுமாதங்களிற்கு மேல் கொடுப்பனவுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 39,796 பெறுமதி கொண்ட 15 எண்ணிக்கையான காசோலைகள் மீது ஒரு அமைச்சு மற்றும் ஆறு திணைக்களங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 227,492 கூட்டு மொத்த தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகள் ஒரு அமைச்சு மற்றும் நான்கு திணைக்களங்களில் அவதானிக்கப்பட்டது. அந்த பெறுவனவுகளை இனங்காண்பதற்கும் உரிய கணக்குகளை சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.18 உள்ளூராட்சி சபைகளின் அலுவல்கள் மீதான மேற்பார்வை**

இலங்கை அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் எட்டாம் பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் மேற்பார்வை மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டது. உள்ளூராட்சிச் சபைகளின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வடமாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் 23 உள்ளூராட்சி சபைகள் மாத்திரம் 2014 மார்ச் 31 இற்கு முன்னர் மீளாய்வாண்டிற்கான கணக்குகளை கணக்காய்விற்காக சமர்ப்பித்திருந்தன. மேலும் மீளாய்வாண்டு தொடர்பில் வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் 11 வருடாந்த கணக்குகள் 2015 ஏப்ரல் 01 இலிருந்து 2015 செப்தெம்பர் 21 வரையான காலத்தின் போது சமர்ப்பித்திருந்தன.

(ii) உள்ளூராட்சிச் சபைகளின் இறுதிக்கணக்ககள் மீது முனைப்பழியுள்ள கண்காய்வு அபிப்பிராயங்களின் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **மாவட்டம்** | **நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்ட முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தின் எண்ணிக்கை** |
|---|---|
| யாழ்ப்பாணம் | 17 |
| முல்லைத்தீவு | 04 |
| கிளிநொச்சி | 03 |
| வவுனியா | 05 |
| மன்னார் | 05 |
| | 34 |

(iii) உள்ளூராட்சிச் சபைகளின் நிதிக்கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள்

(அ) மாகாண ஆணையாளரின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் அறிக்கைகள் மீது மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் அசாதரண கால தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகள் உப பதிவேடுகள் அல்லது ஏடுகளில் காட்டப்பட்ட மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தும் தகுதியில்லாதிருந்த உள்ளூராட்சிச் சபைகளின் பல உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்தியிருந்தனர்.

(உ) காணி மற்றும் கட்டிடங்களில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணக்குகளிற்குத் கொண்டுவரப்படாமையினால் உள்ளூராட்சிச்

சபைகளின் காணி மற்றும் கட்டிடங்களின் உண்மையான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) 25 ஆண்டுகளிற்கு மேலாக ஆதனங்களில் மதிப்பீடு மேற்கொள்ளத் தவறியமை காரணமாக வருமான வரிகள் மற்றும் வீதவரிகள் அதிகரித்துக்கொள்ள முடியாதிருந்தது.

(எ) பிரதேச சபைகளிற்குச் சொந்தமான பல்வேறு காணிகள் வட பிராந்திய போக்குவரத்துச் சபையால் பஸ் தரிப்பிடங்களிற்காக பயன்படுத்திய போதிலும் வட பிராந்திய போக்குவரத்து சபையிடமிருந்து அறவீடுகளெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) யாழ்ப்பாண மாநகர சபையால், அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்துடன் அந்த அங்கீகாரமற்ற பதவியணியினருக்கு சம்பளங்களாக ரூபா 17,453,550 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைகளால் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு உள்ளூராட்சி சேவைகளால் செய்யப்பட்ட ரூபா 137,776,442 ஓய்வூதிய பங்களிப்பு அனுப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 6.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

மாகாண சபை, 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 31 மாகாண திணைக்களம் என்பன மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திடிருக்க வில்லை.

### 6.2. உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண நிதி விதி 99 இன் பிரகாரம் ஆளுநர் செயலகம் மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மா.நி.வி 101 இன் பிரகாரம், மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் தயாரிப்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஆலோசனை பெறப்படவில்லை.

(இ) மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் அறிக்கையிடப்பட்ட பல்வேறு விடயங்களில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் அர்த்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவுதல்

2009 யூன் 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றுநிரூபத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம், குறைந்தது காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒரு கூட்டத்தையேனும் நடாத்தியிருக்கவில்லை.

## 6.4. வடக்கு, கிழக்கு மாகாண சபையைப் பிரித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையின் அடிப்படையில் 2006 திசெம்பர் 22 இல் அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டது. எனினும், பிரிக்கப்பட்டமை மற்றும் வடக்கு மாகாண சபை நிறுவப்பட்டமை என்பன தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2014 திசெம்பர் 31 வரை பிரசுரிக்கப்படவில்லை. அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபை பிரசுரிகக்ப்பட்டதிலிருந்து 7 ஆண்டுகள் பூர்த்தியான பின்னரே 2013 ஒக்தோபர் 25 இல் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபை நிறுவப்பட்டது.

## 6.5. கொள்வனவுத் திட்டம்

(i) 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீடு சுற்றுநிரூபத்தின் பிரகாரம் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

(ii) கொள்வனவுகளிலுள்ள பொதுவான குறைபாடுகள்

(அ) ரூபா 856,800 இற்காக அனுமதிப்பத்திர படிவங்கள் அச்சிடலிற்கான கொள்வனவு

கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பிரிவிற்க முரணாக மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் ஐந்து கேள்விகளை விட குறைவான அடிப்படையில் ரூபா 856,800 பெறுமதியான 300,000 எண்ணிக்கையான வருமான அனுமதிப்பத்திரப் படிவங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மேலும், மேற்குறிப்பிட்ட படிவங்களின் அச்சிடல் அரசாங்க அச்சகங்களிற்குப் பதிலாக தனியார் அச்சிடல் நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்ததமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 1,026,820 இற்காக 02 முச்சக்கர வண்டிகளின் கொள்வனவு

மீளாய்வாண்டின் போது 02 முச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்வதற்காக ஆளுநர் செயலகத்தால் ரூபா 1,026,820 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆளுநர் செயலகம் வருடாந்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் குறைநிரப்பு ஏற்பாடுகள் ஊடாக இந்த கொடுப்பனவை செய்திருந்தது.

(ii) முச்சரக்கு வண்டிகளின் தேவை விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனத் திருத்தங்கள் ரூபா 2,984,203

(i) கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பிரிவிற்க முரணாக ஐந்து கேள்விகளை விட குறைந்த அடிப்படையில் ரூபா 2,532,803 பெறுமதிக்கு ஆளுநர் செயலகத்தால் 05 வாகனங்கள் திருத்தப்பட்டிருந்தது.

(ii) கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக ஐந்து கேள்விகளை விட குறைந்த அடிப்படையில் ரூபா 451,400

பெறுமதிக்கு மாகாண உள்ளக கணக்காய்வு பிரிவால் ஒரு வாகனம் திருத்தப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 598,800 இற்காக மேசைக் கணணித் தொகுதியின் கொள்வனவு

கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவிற்கு முரணாக ஐந்து கூறுவிலைகளை விடக் குறைவான அடிப்படையில் ரூபா 598,800 பெறுமதிக்கு ஆளுநர் செயலகத்தால் மேசைக் கணணித் தொகுதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 6.6. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளின் செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பித்தல்

(i) 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க பொது திறைசேரி சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண சபையின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு தரப்பட்டிருக்கவில்லை.

(ii) 2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 01/2004 ஆம் இலக்க பொதுத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் 34 உள்ளூராட்சிச் சபைகளின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.7. பாதீட்டுக் கட்டுப்பாடு

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 27(3)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையிடமிருந்து அனுமதி ெற்றுக்கொள்ளாமல் பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 28 தலைப்புக்களின் கீழ் ரூபா 3,544,514,044 தொகை 110 எண்ணிக்கையான குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக மாற்றப்பட்டிருந்தன. மேலும், பாதீடானது முறையான நிதிக் கட்டுப்பாட்டின் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.8. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து மாகாண சபையின் பேரவைக்கு ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணசபை ஸ்தாபிக்காமையால் 2007 – 2013 வரையான (7 ஆண்டுகள்) ஆண்டுகளாக வட மாகாண சபையின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 1987 இன் 42 ஆம் இலக்க

மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 31 வரை பேரவைச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவால், 2007 இலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு மாகாண சபையால் பொறிமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 6.9. தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் மீதான அவதானிப்புகள்

(i) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் அறிக்கையிடப்பட்ட தீர்க்கப்படாத விடயங்கள்

முன்னைய ஆண்டு அறிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்ட கொள்வனவுகளில் சுட்டிக்காட்டப்பட்ட பல முறையீனறங்களைத் திருத்துவதற்கு உரிய அதிகாரிகளால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) ரூபா 9,100,000 இற்காக 100 மடி கணனிகளின் கொள்வனவு
(ஆ) ரூபா 6,145,688 இற்காக தனியார் நிறுவத்திற்கு குளிரூட்டல் சாதனம் பொருத்துதல் ((வீரசிங்கம் மண்டபம்)
(இ) ரூபா 8,575,000 இற்காக 15 உழவியந்திர ரிப்பர் பெட்டி மற்றும் 20 பவுசர்களின் கொள்வனவு
(ஈ) புதிய ரொயாட்டோ கொன்வனவு - ரூபா 9,950,000
(உ) ரூபா 8,859,500 இற்காக 700 சைக்கிள் கொள்வனவு
(ஊ) ரூபா 32,200,000 இற்காக 10 பஸ்கள் கொள்வனவு
(எ) ரூபா 59,400,000 வீட்டு நிர்மாணத்திற்காக செய்யப்பட்ட கொடுப்பனவு
(ஏ) கல்வனேஸ் இரும்பு கூரைத் தகடுகளின் கொள்வனவு -ரூபா 18,400,800
(ஐ) ஆளுநர் அலுவலகத்திற்கான தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு - ரூபா 7,006,430
(ஒ) மீள்குடியேற்ற குடும்பங்களின் 70 எண்ணிக்கையான தண்ணீர் தொட்டிகள் (10001) கொள்வனவு- ரூபா 894,000
(ஓ) யாழ்ப்பாணம் மாவட்டத்திற்காக 8’ X 6’ அளவில் 10 விளம்பரப் பலகைகளின் கொள்வனவு - ரூபா 865,000
(ஔ) உதிரிப்பாகங்களுடன் 200 நீர் இறைக்கும் இயந்திரங்களின் கொள்வனவு - ரூபா 6,580,000
(க) மீள்குடியேற்ற விவசாயக் குடும்பங்களிற்காக விவசாய கைநூல் புத்தகத்தின் அச்சிடலிற்கான கொள்வனவு - ரூபா 1,152,000
(கா) 05 உயர்ந்த நில பாரிய இயக்க டீசல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் கொள்வனவு - ரூபா 4,755,000

(கி) 10 இணைந்த பயிர்அறுவடைக் கருவிகளின் கொள்வனவு (மாதிரி 4 எல்இசற் - 2-0) கொள்வனவு- ரூபா 15,300,000

(கீ) 100 கேவிஏ மின்பிறப்பாக்கிகளின் கொள்வனவு -ரூபா 2,647,128.

(கு) பழைய பூங்கா அபிவிருத்தி மீதான செலவினம் - ரூபா 10,857,486

(கூ) கல்வனேஸ் இரும்பு கூரைத் தகடுகளின் கொள்வனவு -ரூபா 11,880,000

(கெ) 08 அம்புலன்ஸ்களின் கொள்வனவு -ரூபா 42,000,000

(கே) 10 உழவியந்திரங்கள் மற்றும் 05 பெட்டிகளின் கொள்வனவு- ரூபா 13,115,000

(கை) பம்புடன் சேர்த்து 15 தண்ணீர் பவுசர்களின் கொள்வனவு- ரூபா 4,425,000

(கொ) கணனிகள் மற்றும் நிழங்படப் பிரதி இயந்திரங்களின் கொள்வனவு ரூபா 7,706,150

(கோ) யாழ்ப்பாண மாவட்டத்திற்காக 8’ X 6’ அளவில் 111 எண்ணிக்கையான விளம்பரப் பலகைகளின் (விளம்பர பதாகை) கொள்வனவு -ரூபா 10,010,900

(கௌ) வருமான அனுமதிபத்திர படிவங்களின் அச்சிடல்- ரூபா 794,082

(ச) கல்வனேஸ் இரும்பு கூரைத் தகடுகளின் கொள்வனவு -ரூபா 38,273,000

(சா) சைக்கிள்களின் கொள்வனவு - ரூபா 10,528,400

(சி) சீமெந்து பைகளின் கொள்வனவு - ரூபா 2,205,000

(சீ) வாகன திருத்தங்கள் - ரூபா 3,992,898

(சு) கணனி தொகுதி, மடி கணனி, பிறன்ரர்கள் போன்றவற்றின் கொள்வனவு- ரூபா 2,012,580

(சூ) மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தால் தையல் மெசின்கள் வழங்கல்

(ii) மீள வேலைக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு மேலதிக சம்பள கொடுப்பனவு - ரூபா 3,360,950

(iii) பிரதேச வைத்தியசாலை மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் (எம்ஓஎச்) அலுவலகத்தின் நிருமாணத்திற்காக மேலதிகமான காணிச் சுவிகரிப்பு ரூபா 3.75 மில்லியன

---

2010 ஆகஸ்ட் 07 இல் பொதுமக்களால் நன்கொடை அளிக்கப்பட்டு திணைக்களத்துக்கு சொந்தமாக 5 ஏக்கர் காணி இருந்தும் கூட பூநகரியில் எம்ஓஎச் அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 15 ஏக்கர் காணி சுவீகரிப்பதற்கு மாகாண சுகாதார அமைச்சினால் 2011 திசெம்பர் 31 இல் ரூபா 3.75 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. சுவிகரிக்கும் சமயத்தில் ஒரு ஏக்கருக்கான சந்தை விலை ரூபா 200,000 மாத்திரமேயானதுடன்

அத்தகையவாறு ரூபா 750,000 மேலதிகமாக செலுத்தப்பட்டது. மேலும், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம விலை மதிப்பீட்டாளரிடமிருந்து கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் விலை மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒரு ஏக்கர் பரப்பளவிலும் குறைவான காணியிலேயே கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததென்று அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சு செயலாளர், கிளிநொச்சி மாவட்ட செயலளகத்தால் காணிச் சுவீகரிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் வைத்திருப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு ரூபா 3,750,000 செலுத்தப்பட்டது. காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவு தற்போது வரை சுவீகரிப்பு நடைமுறை பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. சுவீகரிப்பு பூர்த்தியாக்கப்பட்ட பின்னர், கிளிநொச்சி கச்சேரி ஊடாக பூநகரி பிரதேச செயலளகத்தில் கொடுப்பனவை விடுவிக்க வேண்டும். எங்களுடைய முன்னைய தீர்மானத்தின் பிரகாரம், 15 ஏக்கர் காணி பூநகரி எம்ஓஎச் அலுவலகம் பூநகரி மாவட்ட வைத்தியசாலையை நிர்மாணிக்கும் நோக்கத்திற்கு பயன்படுத்த வேண்டியதுடன் மேலும் மிகுதி காணி வைத்தியர்கள் மற்றும் தாதிமார் விடுதிகள் போன்றனவற்றை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்த வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

(iv) மேலதிகக் கொடுப்பனவு ரூபா 210,240

---

(அ) கிளிநொச்சி செந்திரேசா மகளீர் கல்லூரியில் வகுப்பறைகளை நிர்மாணிப்பதற்கு தேவைப்பட்ட அளவுகளிற்கு மேல் கொள்வனவு செய்யப்பட்ட கட்டிடப் பொருட்களின் மிகையான அளவுகள் காரணமாக ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட ரூபா 210,240 ஆன மேலதிக கொடுப்பனவை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிளிநொச்சி செந்திரேசா மகளீர் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடத்தின் மேற்பார்வைக் கட்டணமாக கிளிநொச்சி வலய கல்வி அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிற்கு ரூபா 99,747 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை வேலை தொடர்பில் செய்யப்பட்ட வேலையை நிரூபிப்பதற்கு கணக்காய்விற்காக சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை.

(இ) கல்வி அமைச்சின் 2013 மே 22 ஆந் திகதிய 23 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக கிளிநொச்சி செந்திரேசா மகளீர் கல்லூரி

மாணவர்களிடமிருந்து நிர்வாக கட்டணமாக ரூபா 1,075,850 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது.

(v) 240 பாடசாலை மாணவர்களிடமிருந்து நிர்வாக கட்டணமாக சேகரித்த ரூபா 2.4 மில்லியனின் தவறான பயன்படுத்தல்

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாக 2013 ஆம் ஆண்டின் போது யாழ்/ இந்து ஆரம்ப பாடசாலையின் 240 மாணவர்களிடமிருந்து ரூபா 2.4 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும், சேகரிக்கப்பட்ட ரூபா 2.4 மில்லியன் பணம் பாடசாலையாலோ அல்லது பாடசாலை அபிவிருத்தி சங்கத்தாலோ பேணப்பட்ட வங்கிக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. சேகரிக்கப்பட்ட தொகையில் ஏற்பட்ட எந்தவொரு செலவினத்திற்கும் எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்காமையால் சேகரிக்கப்பட்ட ரூபா 2.4 மில்லியன் பணம் தவறாகப்பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 6.10. சுற்றாடல் மற்றும் சமூகப்பொறுப்புக்களின் வெளிப்பாடு

(i) திண்மக் கழிவு முகாமைத்துவம்

வட மாகாணத்தில் 34 உள்ளூராட்சி அதிகாரசபைகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுகள் உருவாக்கப்பட்ட செயற்திட்டம் அமுலாக்கப்படாமையாக காணிகளில் எரிக்கப்பட்டோ அல்லது புகைப்படுவதன் ஊடாக அழிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் சாவகச்சேரி நகர சபையால் செலவழிக்கப்பட்ட ரூபா 3.2 மில்லியன் தொகை பயன்பாடற்று இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக சுற்றுமதில் நிர்மாணிப்பதற்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் செலவழித்த ரூபா 4.73 மில்லியன் தொகையும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சுன்னாகம் மின்நிலைய பகுதியில் குடி தண்ணீர் மாசடைதல்

2012 இல் சுன்னாகம் படிம எரிபொருள் மின் நிலையத்திற்கு மிகவும் அருகில் சுன்னாகம் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டிருந்ததுடன் சுன்ணாகம் நீர்த் தேக்கப்பகுதியில் எரிபொருள் வாசனையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (என்டபிள்யூஎஜ்டிபீ) தொடர்ச்சியாக அவதானித்திருந்தது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2013 நவம்பர் மாதத்தில் உடுவில் மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளடங்கலாக சுன்னாகம் மின்நிலையத்தை சுற்றி ஏறத்தாழ 100 கிணறுகள் பகுப்பாய்வு

செய்வதற்கு செய்திருந்தது, ஏறத்தாழ 80 சதவீத கிணறுகள் 0.33 முதல் 19.40 மிகி/லீ வரையான வீச்சில் (எஸ்எல்எஸ் வரையறை 0.2 மிகி/ல் – 1.0 மிகி/லீ) கழிவு ஓயில் கழந்திருந்தன. மேலும், இலங்கை மின்சாசைபையின் பகுதி அலுவலகம் 16 கிணறுகளை பரீட்சித்திருந்ததுடன் அந்த அறிக்கையும் ஓயில் கசிவு மாசடைதலை குறிக்கின்றது. பகுப்பாய்விலிருந்தான விளைவுகள் பின்வருமாறு உள்ளன.

- மொத்தமாக 150 கிணறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- 109 கிணறுகள் (73 சதவீதம்) நியமத்தைவிட உயர்ந்த ஓயில் மட்டத்தைக் காட்டியிருந்த அதேநேரம் 07 கிணறுகள் (4 சதவீதம்) எல்லையின் கீழ் உள்ளதுடன் 34 கிணறுகள் (23 சதவீதம்) ஓயில் மற்றும் கிறீஸ் அசுத்தமாக்கப்பட்டிக்கவில்லை.
- ஓயில் மற்றும் கிறீஸ் அசுத்த அளவு சுன்னாகம் மின்நிலைய பகுதியினைச் சுற்றி 1.5 கி.மீற்றறிற்குள் அவதானிக்கப்பட்டன.
- உயர்ந்த ஓயில் மற்றும் கிறீஸ் அசுத்த அளவு சுன்னாகம் மின்நிலைய பகுதியினைச் சுற்றி அவதானிக்கப்பட்டன.
- ஓயில் பரவுதல் வகை வடக்கை நோக்கி 1.50 முதல் 2.0 கி.மீ வரை அவதானிக்கப்பட்டது. ஓயில் அசுத்தமாக்கல் மேலும் பரவியிருந்தமையை 1.5 கி.மீற்றரை விட குறைவாக அசுத்தமாக்கப்பட்டிருந்த வேறு வழியில் ஒப்பிடப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசெட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆளணி நிர்வாகம்
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) வாகனங்களின் பாவணை
(உ) நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு
(ஊ) கணக்கீடு
(எ) உள்ளகக் கணக்காய்வு